Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்



பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7893

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 27 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 29 (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:73

# கருணா குழு என்ற பெயரில் இராணுவமே உளவியல் போர்!

## மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்



(அம்பாறை)

தமிழர் தாயகப் பிரதேசங்களில் கருணா குழு என்ற பெயரில் எந்தக் குழுவும் கிடையாது. மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களிலுள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் சம்பவங்களுக்கு கருணா குழு எனப் பூச்சாண்டி காட்டிக் கொண்டு – இராணுவப் புலனாய்வுப் பிரிவே உளவியல் யுத்தம் ஒன்றை நடத்தி வருகிறது என விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ. கௌசல்யன் தெரிவித்தார்.

கொக்கட்டிச் சோலையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியற்துறைப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு ஒன்றின் போதே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மேலும் பதிலளிக்கையில்–

சிங்கள பௌத்த அரசின் துணையுடன் அரச இராணுவ புலனாய்வுத்துறை கருணா குழு எனும் பெயரைப் பயன்படுத்தி மக்களை அச்சுறுத்தி வருவதுடன் அந்தப் பெயரில் உளவியல் ரீதியான யுத்தமொன்றையும் எம் மக்கள் மீது திணித்து வருகின்றது.

அரசகட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரச இராணுவ புலனாய்வுப் பிரிவு ஏற்கனவே தம்முடன் இணைந்து செயற்பட்டுவரும் குழுக்களையும் பயன்படுத்தி சம்பவங்களை நடத்திவிட்டு கருணா குழுவின் வேலை எனப் பிரசாரம் செய்யும் அதேவேளை அரச ஊடகங்களும் கருணா குழுவின் வேலைதான் என மகுடம் சூட்டி வருகின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு

# அரசுக்கு காலக்கெடு விதிக்க உதவி வழங்கும் நாடுகள் முடிவு!

## அடுத்த மாதம் பிரஸெல்சில் மாநாடு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீளவும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வற்புறுத்தும் வகையில் ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைவர்கள் கூட்டம் ஒன்று நடைபெறவிருப்பதாகவும் –

இதில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான இறுதிக் காலக்கெடுவொன்று அறிவிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்வதற்கான துரிதமான ஏற்பாடுகளை மேற்கொள்ள உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைவர்களது சபை தீர்மானித்துள்ளது.

பிரஸெல்சில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலின் போது தற்போது நிலவிவரும் சூழ்நிலை மற்றும் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான இறுதிக் காலக் கெடுவை வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டத்தில் அதிரடிப்படை குவிப்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள முகாம்களில் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு வருவதுடன் - அக்கரைப்பற்றிலுள்ள சோதனைச்சாவடிகளில் பயணிகள் மீதான சோதனையும் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

கோமாரி பகுதியில் காடுகளை அண்டிய பகுதியில் அமைந்துள்ள அதிரடிப்படைத் தளத்திலிருந்து படையினர் நிலைகளுக்கு நகர்ததப்பட்டு வருகின்றனர். அத்துடன் விசேட அதிரடிப்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மக்களின் காணிகள் வழியாகவும் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதேவேளை கடந்த வாரம் அறுகம்குடாவில் விசேட அதிரடிப்படையின் உயர் தளபதிகளின் முக்கிய சந்திப்புகள் இரு தடவைகள் நடைபெற்றதாகவும் தெரியவருகிறது.

## தமிழறிஞர் சொக்கனுக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம்!



(கிளிநொச்சி)

தமிழ்மொழி, இன, சமுதாய மேன்மை கருதி மூதறிஞர் சொக்கனின் அரும்பணியை நினைவில் நிறுத்தி அவரை நாட்டுப்பற்றாளராக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அரசியற்துறை நடுவப் பணியகத்திலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் -

மூதறிஞர் சொக்கனின் மறைவுச் செய்தி ஈழத் தமிழ் மக்களை பேரதிர்ச்சியிலும் துயரத்திலும் ஆழ்த்தியுள்ளது. அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்மொழி, இன, சமுதாய மேன்மையை இலக்காகக் கொண்ட நூற்றுக் கணக்கான இலக்கியங்களைப் படைத்து தமிழ் இலக்கிய உலகில் பெரும் புகழ்பெற்று விளங்கியவர் மூதறிஞர் சொக்கன்.

அவரது படைப்புக்களுக்காக பல்வேறு நிறுவனங்களினதும் அமைப்புக்களினதும் பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்ற போதிலும் அடக்கமாகவும், அமைதியாகவும் இருந்து தமிழ்ப் பணியாற்றி வந்தார்.

தமிழ் மொழிப்பற்றும் இனப்பற்றும், மண் பற்றும்கொண்ட மூதறிஞர் சொக்கன் - ஆசிரியராக, பள்ளி முதல்வராக, விரிவுரையாளராக சிறப்புறக் கல்விப் பணியாற்றி ஒய்வு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இசை நிகழ்ச்சியில் குண்டுவெடிப்பு இரண்டுபேர் பலி; 15 பேர் படுகாயம்!

### கொழும்பில் நேற்றிரவு சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் நேற்றிரவு இடம்பெற்ற நடிகர் சாருக்கானின் இசை நிகழ்ச்சியில் இடம்பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன் 15 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றிரவு 8.20 மணிக்கு ஆரம்பமான இசை நிகழ்ச்சி முடிவடையும் நேரத்தில் இரவு 11.30 மணியளவில் கிரனேட் ஒன்று வீசப்பட்டது. இந்தச் சம்பவத்தில் தீபிகா மகேசி எதிரிசிங்க (வயது 32) மற்றும் 22 வயதுடைய இளைஞர் ஒருவரும் உயிரிழந்தனர்.

அத்துடன் மேலும் 15 பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பங்கேற்ற ஹிந்தி நடிகர் சாருக்கான் பொலிஸாரால் பாதுகாப்பாக ஹொட்டேலுக்கு கூட்டிச்செல்லப்பட்டதாகவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆறுகால்மடம் புனரமைக்கப்படுகிறது

வண்ணை ஆறுகால்மடம் நிகொட் நிறுவனத்தால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. மானிப்பாய் வீதியில் அறிவொளி சனசமூக நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள ஆறுகால் மடத்தைப் புனரமைத்துப் புதுப்பொலிவுடன் மெருகூட்டுவதற்கான நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய சோனகதெரு கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நீண்ட காலமாக ஓலையால் வேயப்பட்டிருந்த கூரைக்கு ஓடு போடப்படவுள்ளதுடன் ஆறு தூண்களுக்கும், தரைக்கும் சீமெந்துப் பூச்சு மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய சோனகதெரு கிராமத்தில் பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டுவரும் நிகொட் நிறுவனத்தினர் ஆறுகால்மடம், வயல் வீதி புனரமைப்பு பணிகளையும் மேற்கொள்ளவுள்ளனர். ஆறுகால் மடம் அறிவொளி விளையாட்டுக் கழகத்தினருக்கும் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களையும் வழங்கவுள்ளதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (91)

# மகளிருக்கான தையல் பயிற்சி

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையம் மகளிருக்காக தையல் மற்றும் வர்ணமிடல் பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற விரும்பும் மகளிர் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

(மீசாலை)

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு நாளை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும், எனவே தீட்சை பெற்றுக் கொள்ளாத சைவச் சிறுவர்கள் நாளையதினம் தீட்சையைப் பெற்றுக்கொள்ள முடியும் என ஆலய பிரதம குரு தெரிவித்துள்ளார். (25)

# ஒளிவிழா நிகழ்வு

நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையின் ஒளிவிழாநிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

ஒளிவிழாத் திருப்பலியினை நெடுந்தீவுப் பங்குத்தந்தை எஸ்.ஜெபநேசரட்ணம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. அதிபர் கெ.அன்ரன் மரியதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பிரதமவிருந்தினராக அருட்சகோதரி இக்னேசியா சூசைப்பிள்ளை கலந்து சிறப்பித்தார். (113)

# பாலர் கல்விக் கழகம் நடத்திய 38 ஆவது கலை நிகழ்வு

பாலர் கல்விக் கழகமும் 16 பாலர் பாடசாலைகளும் இணைந்து நடத்திய 38 ஆவது கலை நிகழ்வும் போட்டி நிகழ்வுகளும் நேற்று யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பாலர் கல்விக் கழகத் தலைவர் வ.கிருஸ்ணபிள்ளை தலைமையில் காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின. விழாவுக்கு பிரதம விருந்தினராக 'கலைஞானகேசரி' எம்.எஸ்.ஸ்ரீதயாளனும், கௌரவ விருந்தினராக தெய்வநாயகி இரத்தினகோபாலும் கலந்து சிறப்பித்தனர்.

சிறப்புவிருந்தினர் உரையுடன் கௌரவவிருந்தினர் கௌரவிப்பும் இடம்பெற்றது. அதில் 38 ஆண்டுகளின் முன்பு பாலர் கல்விக்காக பாடுபட்டு பாலர் கல்விச்சாலைகளை உருவாக்கி சேவை செய்த அமரர் இரத்தினகோபாலின் சேவையையும் முயற்சியையும் பாராட்டி அவரது பாரியாராகிய தெய்வநாயகி இராத்தினகோபாலுக்கு பாலர் கல்விக்கழக நிர்வாக உறுப்பினர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்க - பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மலர்மாலை அணிவித்து கௌரவித்தனர்.

சிறப்பாக கலை நிகழ்வு நடத்திக்காட்டிய பாடசாலைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (63)

# எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமாலை 4.00 மணிக்கு எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை வைத்தியர்களான சிவராசா, குணராஜா நக்கீரர், சிவப்பிரகாசம், தர்சினி ஆகியோர் ஏற்றினர். தொடர்ந்து வேம்படி பெண்கள் உயர்தர மாணவிகளதும், கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களும் தாளலயம் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வுக்கு கலாநிதி சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

# குருநகரில் கோஷ்டி மோதலை தடுக்க பொலிஸார் காவல்நிலையம் அமைப்பு

யாழ்.பொலிஸாரின் காவல் நிலையம் ஒன்று குருநகரில் பல வருடங்களுக்குப் பின்னர் இயங்க ஆரம்பித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண நிலைமையினால் குருநகர் காவல் நிலையம் 1985 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு செயலற்றுப்போயிருந்தது.

தற்பொழுது அங்கு இடம்பெற்ற கோஷ்டி மோதல்களைத் தொடர்ந்து காவல் நிலையம் ஒன்றை இந்தப் பகுதியில் நிறுவவேண்டியதன் அவசியம் பற்றி பொலிஸாரினால் சமரச கூட்ட வைபவத்தின்போது சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் குருநகருக்கான காவல்நிலையம் இப்பொழுது அந்தப்பகுதியில் இயங்கத் தொடங்கியிருக்கிறது.

இதே வேளை குருநகர் திருநகர்பகுதிகளில் கடந்த சில வாரங்களாக இருந்துவந்த பதற்ற நிலைமை குறைந்து வழமைக்குத் திரும்பி இருக்கிறது.

அதனை அடுத்து படையினர், பொலிஸாரின் கண்காணிப்பு ரோந்து நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வீதித் தடைகளும் அகற்றப்பட்டுள்ளதால் மக்கள் இப்பொழுது சகல இடங்களுக்கும் சென்றுவரக் கூடியதாக இருக்கிறது.

இடம்பெயர்ந்து சென்றிருந்தவர்கள் மீண்டும் தத்தமது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர். (206)

# இணுவிலில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி தடுப்பு மருந்து ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி போடுதல் நாளைமுதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9.00 மணிமுதல் 10.30 மணிவரை பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடியிலும், 11 மணி முதல் 12.30 மணிவரை வசிகடைச் சந்தியிலும், 1 மணி முதல் 2.30 மணிவரை துரைவீதிச் சந்தியிலும், 3.00 மணிமுதல் 4.30 மணிவரை தாவடி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

மறுநாள் காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை தாவடிப்பிள்ளையார் கோவிலடியிலும், 11 மணி முதல் 12.30 மணிவரை தாவடி காளிகோவிலடியிலும் 1 மணி முதல் 2.30 மணிவரை தாவடி வேம்படி முருகமூர்த்தி கோவிலடியிலும் 3.00 மணிமுதல் 4.30 மணிவரை தாவடி பத்திரகாளி கோவிலடியிலும்,

புதன்கிழமை காலை 9.00 மணி முதல் 10.30 மணிவரை இணுவில் கிழக்கு மாதர் சங்கத்திலும், 11 மணிமுதல் 12.30 மணிவரை மருதனார்மடம் பிரதேச சபையிலும், 1 மணிமுதல் 2.30 மணிவரை வட்டுவினி சந்தியிலும், 3.00 மணிமுதல் 4.30 மணிவரை இணுவில் பரமானந்தா நூல் நிலையம் ஆகிய இடங்களில் நோய்த்தடுப்புமருந்து ஏற்றப்படவுள்ளது.

இந்தப் பகுதிகளில் நாய் வளர்ப்போர் குறித்த இடங்களில் நாய்களுக்கான ஏ.ஆர்.வி தடுப்பு மருந்தினை ஏற்றுமாறு இணுவில் பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

# ஒளிவிழாக் கலை நிகழ்வு

தென்னிந்திய திருச்சபை பகற்பராமரிப்பு நிலைய நெடுந்தீவு மத்தி, மேற்கு சிறார்களின் ஒளிவிழாக் கலை நிகழ்வு எதிர்வரும் 15ம், 16ம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

நெடுந்தீவு மேற்கு பகற்பராமரிப்பு நிலைய சிறார்களின் நிகழ்வுகள் 15ம் திகதி புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் செல்வி க.வைத்தியநாதன் கலந்துகொள்கின்றார்.

நெடுந்தீவு மத்தி பகற்பராமரிப்பு நிலைய சிறார்களின் நிழ்வுகள் 16ம் திகதி வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழவில் பிரதம விருந்தினராக நெடுந்தவு பிரதேச பங்குத்தந்தை அருட்திரு எஸ்.ஜெபநேசரட்ணம் அடிகளாரும், கலந்து கொள்கின்றார். (113)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வலம்புரிச் சங்கு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: க.செ.கைலாசம்பிள்ளை அன் சன்ஸ் (மருந்துக்கடை), 76, பெரியகடை, யாழ்ப்பாணம். T.P.: 222 2912 (C/3460)

**Hair Formula**
Supplement Capsules

தலைமயிர் உதிர்தல், இளநரையையும் தடுத்து ஆரோக்கியமான கரும் நிற கூந்தல் வளர்ச்சிக்கும், முகத்தில் கறும்புள்ளி முகப்பறுக்களை தடுத்து சருமத்திற்கு பளபளப்பையும் கொடுக்கவல்லது.
Hair Formula Supplement Capsules
With 15 Vitamins & Minerals Including Vitamin E, Biotin, Calcium-Pantothenate.
Hair Formula என்றே கேட்டு வாங்குங்கள்
சாப்பிட்ட உடன் ஒரு வில்லை
யாழ் நகரில் விநியோகஸ்தர்கள் தேவை
K.S.P. International Pharmacy Tel : 2449766
CCS

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
சரத்குமார், நிகிதா நடித்த
**சத்ரபதி** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
**SPIDER MAN - 2**

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.
இளைய தளபதி விஜய், (குளிரூட்டப்பட்டது)
சங்கவி, கவுண்டமணி, செந்தில் நடித்த
**கோயம்புத்தூர் மாப்பிள்ளை** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30 (பு.நே)
தினசரி இரவு 6.30, 9.00 [பு.நே]
**THE LORD OF THE RINGS**

**நாகம்ஸ்** சுன்னாகம்
அஜித், பூஜா மற்றும் பலர் நடித்த
**அட்டகாசம்**
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)
மிக விரைவில்
அடுத்த வெளியீடு
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதினம்
அர்ஜின், லைலா, வடிவேல் நடித்த



**ஜெய் சூர்யா**

**ராஜா** யாழ்ப்பாணம்.
சில தினங்கள் மட்டும்
இந்தியாவில் 200 நாட்கள் ஓடிய வெற்றிச் சித்திரம்
சேரன், சிநேகா, கோபிகா நடித்த
**ஆட்டோகிராப்** (ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30

## நாதன்ஸ் சினிமா

### பதவி வெற்றிடம்

1. பட இயக்குநர் (*Operator*)
2. பட இயக்குநர் பயிலுநர்

தகுதியுடையோர் நேரில் வரவும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.


## சாவகச்சேரி பிரதேசசபை – கொடிகாமம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 20.12.2004ம் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. கேள்விப் படிவம் பெறும் கடைசித் திகதி : 17.12.2004 வரை
02. கேள்விகள் திறக்கும் திகதி : 20.12.2004 திகதி ந.ப. 12.00 மணி

| | வேலையின் பெயர் | இற்றாட் தரம் | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT) உட்பட |
|---|---|---|---|---|
| 1. | சரசாலை தெய்வங் கேணி வீதி புனரமைப்பு | $M_9$ | 3,000.00 | 575.00 |
| 2. | கச்சாய் பாதாள வைரவர் கோயில் வீதி புனரமைப்பு | $M_9$ | 3,000.00 | 575.00 |

மேலதிக விபரங்களை சாவகச்சேரி பிரதேசசபை தலைமை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சாவகச்சேரி பிரதேசசபை,
தலைமையலுவலகம்,
கொடிகாமம்.
10.12.2004.

(C/3459)

கு.ந.பாலச்சந்திரன்
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.


புதுவருடத்தை முன்னிட்டு கழிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்

கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும், பொருத்திக்கொள்ளவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 2486

இல. 91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.
இல. 80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

(சி-3457)

# அரசியலமைப்பு திருத்தச்சட்டம் ஜனவரியில் சமர்ப்பிக்கப்படும்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் கன்னி வரவு-செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதையடுத்து, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை நீக்கிவிட்டு, நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் பதவியைத் தோற்றுவிப்பதற்கான, அரசியலமைப்பு யாப்புத் திருத்தத்தை எதிர்வரும் ஜனவரியில் அரசு நாடாளுமன்றத்தல் சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதன்படி தற்போதுள்ள வாக்களிப்பு முறைக்குப் பதிலாக விகிதாசார மற்றும் தனிக்கலப்பு வாக்களிப்பு முறையைத் தயாரித்து, அனைத்துத் தேர்தல் தொகுதிகளுக்கும் பொறுப்புவாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தெரிவுசெய்துகொள்ளும் உரிமையை வாக்காளருக்கு உரித்தாக்கும் தேர்தல் முறையை அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அரசியலமைப்பு திருத்தவரைபு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் அடுத்த ஜனவரி மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தத் திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றிக்கொள்ளலாம் என்றும் அரசு எதிர்பார்க்கிறது.

இந்த அரசியலமைப்புத் திருத்தத்துக்காக அரசுக்குச் சார்பாக வாக்களிப்பதற்கு ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழு தற்பொழுதே சம்மதம் தெரிவித்திருப்பதாகவும், அதன்போது அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பாதுகாத்துக்கொள்ளும் விதமாகப் புதிய சரத்துக்கள் பலவற்றைச் சேர்த்துக்கொள்வதற்கும் அரசியலமைப்பு திருத்தக்குழு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இதன்படி தற்போது ஐ.தே.கட்சியின் தலைமையுடன் முரண்பட்டுள்ள அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்குழு இந்த அரசியலமைப்புத் திருத்த வாக்கெடுப்பின்போது அரசாங்கத்துடன் இணைந்துகொள்வதற்கு ஆயத்தமாகவுள்ளதாக அரசாங்கத்தரப்பு கருத்து வெளியிட்டுள்ளது. (தே)

# முஸ்லிம் புத்திஜீவிகளுடன் கூட்டமைப்பு எம்.பி.கள் சந்திப்பு

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுபபினர்களுக்கும், வடக்கு முஸலிம் புத்திஜீவிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

வடக்கு முஸ்லிம்கள் சார்பாக வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியற்துறை விரிவுரையாளர் கலாநிதி அலி மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.என்.எச்.எம்.நியாஸ் உட்பட 8 பேர் பங்கு கொண்டனர்.

தமிழத்தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, எஸ்.பிரேமச்சந்திரன், ஈழவேந்தன், உட்பட 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியமர்வு மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்தல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் - யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வசிக்கும் மக்களுடனான சந்திப்பு, தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையிலான நல்லுறவுக் குழுக்களை அமைப்பது போன்ற முக்கிய தீர்மானங்கள் இருதரப்பினராலும் எடுக்கப்பட்டன.

# தூதரகங்களின் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிக்கத் திட்டம்!

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ள வெற்றிடங்களை எதிர்வரும் காலத்தில் பட்டதாரி இளைஞர்களைக் கொண்டு நிரப்புவதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது. போட்டிப் பரீட்சை மூலமே இவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையைச் சிறந்த முறையில் வெளிநாட்டில் கட்டி எழுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக- கடந்த காலத்தில் வெளிநாட்டு தூதுவர் சேவையின் கீழ் ஒரே தடவையில் பலருக்குப் புதிய பதவிகள் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரால் வழங்கப்பட்டன.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அண்மைக்கால வரலாற்றில் ஒரே தடவையில் நியமனங்கள், மிகப்பெரிய அளவில் இடம்பெற்றிருப்பதோடு ஒரே தடவையில் 40 வீதமானோருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜேர்மனியின் தூதுவராகவும், பொது ஆணையாளராகவும் எம்.கே. பலிபான, சீன தூதுவராக எம்.சிங்கந்தர், கனடாவின் பொது ஆணையாளராக வி.ஏ.பி குணதிலக, ஜப்பான் தூதுவராக ரஞ்சித் உயங்கொட, நெதர்லாந்தின் தூதுவராக பெனிகா ஜேடி, ஐக்கிய நாடுகள் சபையின் நியூயோர்க் நகரின் நிரந்தரப் பிரதிநிதியாக பிரசாத் காரியவசம், சவுதி அரேபியாவின் தூதுவராக ஏ.எம்.ஜே.சாதீக், அவுஸ்ரேலியாவின் தூதுவராக அருண விஜயவர்த்தன, பிரான்ஸ் தூதுவராக வாகீஸ்வர, ஹொலன்டின் தூதுவராக எஸ்.நவரெத்தினராசா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (தே)

## பாடசாலை நாட்காட்டி இலவச வெளியீடு

(புத்தூர்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியால் - ஆசிரியர்களதும், மாணவர்களதும் பயன்பாட்டிற்கென 2005 ஆம் ஆண்டுக்கான பாடசாலை நாட்காட்டி வெளியிடப்பட்டுள்ளது.

நாட்காட்டிக்குரிய வழமையான அம்சங்களுடன், அறுபத்துமூன்று நாயன்மார்களின் குருபூசைத் தினங்கள், இந்துக்களின் விசேட விரதங்கள், உற்சவங்கள் பற்றிய விபரங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# சபாநாயகரைப் பதவி நீக்குவதற்கு இப்போது முயற்சிக்க வேண்டாம்!

## ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை



சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதை ஜனவரி மாதம் வரை ஒத்திவைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அரசாங்கக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடநத சில நாட்களாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற குழப்பங்களின்போது அதனைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து சபை அமர்வைத் தொடர்ந்து நடத்திச்செல்வதற்கு சபாநாயகர் முயற்சிஎடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டையடுத்து, சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு அரசாங்கக் கட்சியின நாடாளுமன்ற உறுப்பினர்கள்குழு முயற்சி எடுத்தபோதே ஜனாதிபதி இந்த ஆலோசனை வழங்கினார்.

வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு சபாநாயகர் தடையாக இருக்காத நிலையில், அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கவேண்டிய அவசியமில்லை என ஜனாதிபதி கருத்து வெளியிட்டார்.

அரசாங்கக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரது வேண்டுகோளின் பெயரில் பிரதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அதற்குத் தேவையான ஆவணங்ளைத் தயாரித்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்பங்களையும் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், ஹெல உறுமயவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிக்குகளும் கையொப்பமிட்டுள்ளதாகத் கூறப்படுகிறது.

இது குறித்து சபை முதல்வர் மைத்திரிபால சிறி சேன கருத்துத் தெரிவிக்கையில் -

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 100 பேர்வரையில் கையொப்பம் இட்டுள்ளனர். இதனால் அதை ஒப்படைப்பதா, இல்லையா என்பது குறித்து இதுவரை எந்த முடிவுக்கும் வரவில்லை எனத் தெரிவித்தார். (தே)

# கச்சதீவு கடற்பரப்பில் மீன்பிடிப்பது இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமை

## மன்மோகனுக்கு அனுப்பிய கடிதத்தில் ஜெயலலிதா

இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடித்துச் செல்லப்பட்ட தமிழக மீனவர்கள் அனைவரையும் உடனே விடுவிக்கவேண்டும். இந்த விவகாரத்தில் பிரதமர் மன்மோகன் சிங் நேரடியாகத் தலையிடவேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரியுள்ளார்.

இது குறித்து பிரதமர் மன்மோகன்சிங்குக்கு - ஜெயலலிதா அனுப்பியுள்ள கடிதத்தில் -

தமிழக மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடிக்கும்போது சர்வதேச எல்லையைக் கடந்துவிட்டதாகக் கூறி அவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கிச் சிறைப்பிடித்துச் செல்வது தொடர்கதையாகிவிட்டது. மக்களிடையே உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்தும் இந்தப் பிரச்சினை குறித்து தொடர்ந்து பல முறை தங்களது கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளேன்.

புதுக்கோட்டை, ஜெகதாபட்டினத்தைச் சேர்ந்த 13 மீனவர்கள் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது, அவர்களை இலங்கைக கடற்படையினர் கடந்த 8 ஆம் திகதி சிறைப்பிடித்துச் சென்றனர். அந்த மீனவர்களின் 3 இயந்திரப் படகுகளையும் பறிமுதல்செய்து இழுத்துச் சென்றுள்ளனர்.

இந்தியாவால் இலங்கையிடம் கையளிக்கப்பட்ட கச்சதீவைச்சுற்றி அமைந துள்ள கடற்பகுதியைத் தங்களது மீன்பிடித் தொழிலுக்குத் தமிழக மீனவர்கள் நம்பியுள்ளனர். கச்சதீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதை இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தடுத்துவருகின்றனர். இதுநாளவரை 46 மீனவர்களையும், 101 மீன்பிடிப் படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் கடலோரங்களில் வாழும் தமிழக மீனவர்களிடையே பெரும் கவலையையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளன. இந்தப்பகுதியில் தமிழக மீனவர்கள் தங்களுக்கு உள்ள பாரம்பரிய உரிமையின் அடிப்படையில் வழக்கம்போல மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை மத்திய அரசு கண்டாகவேண்டும்.

என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சரத் அம்பேபிட்டிய கொலை சந்தேக நபர்களின் விளக்கமறியல் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய படுகொலையுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரான நௌபர் எனப்படும் மொகமட் நசீர் நௌபர் எந்த சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறித்து நீதிமன்றம் விசாரணை செய்ய வேண்டியிருப்பதாக கொழும்பு பிரதம நதிபதி சரோஜினி குசேல விஜயவர்த்தன நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

குறிப்பிட்ட சந்தேக நபரை ஏனைய சந்தேக நபர்களுடன் வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்காமல், களுத்துறைச் சிறைச்சாலையில் வைக்குமாறு ஏற்கனவே நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இருப்பினும் இவர் நீதிமன்ற உத்தரவை மீறும் வகையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாக ஊடகங்களில் வெளியான செய்தி குறித்து சரத் அம்பேபிட்டியவின் குடும்ப சட்டத்தரணி சந்திரபால குமாரகே நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இதனையடுத்தே இவர் எந்த சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறார் என்பது குறித்து நீதிமன்றம் விசாரணை மேற்கொள்ள இருப்பதாகப் பதிலளித்தார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய 6 சந்தேக நபர்களும் பாதுகாப்புக்காக நேற்றுமுன்தினம் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி இவர்களுக்கான விளக்கமறியலை எதிர்வரும் 21ம் திகதிவரை நீடித்தார்.

# வெளிநாட்டு தூதரகங்களின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களினதும் பாதுகாப்பு உடனடியாகப் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன், இதற்கான விசேட திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. உள்நாட்டு பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக ரணவிராஜ தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற உயர்மட்டப் பாதுகாப்பு மாநாட்டிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சகல வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் தூதரக அதிகாரிகள் வாசஸ்தலங்களினதும் பாதுகாப்பு கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

முன் அனுமதி பெறப்படாமல் தூதரகங்களை புகைப்படம் எடுப்பது தடைசெய்யப்பட்டிருக்கும் அதேவேளை, இந்த உத்தரவை மீறி புகைப்படம் எடுப்போர் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வெளிநாட்டுத் தூதரகங்களில் பாதுகாப்புக்காக கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சகல தூதரகங்களையும் கண்காணிக்கும் வகையில் நடமாடும் பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. திடீரென அரசாங்கம் வெளிநாட்டுத் தூதரகங்களின் பாதுகாப்பை அதிகரித்தமைக்கு எந்தக் காரணமும் கூறப்படவில்லை.



. கடற்படையின் 54 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இலங்கை கடற்படையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி - மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைக்கிறார்.

# பங்களாதேஷூடனான முதல் டெஸ்ட்
# இந்தியா 164 ஓட்டங்களால் முன்னணி



சச்சின் டெண்டுல்கரின் அபாரமான சதத்தின்மூலம் பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு 348 ஓட்டங்களைக் குவித்து - 164 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் டாக்காவில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 184 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது.

இதையடுத்து நேற்றுமுதல் இனிங்ஸை இந்திய அணி ஆட ஆரம்பித்தது.

இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. 19 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த நிலையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஷேவாக் பாஸ்யாவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

ஷேவாக் 18 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 13 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதையடுத்து கௌதம் காம்பீருடன் ராகுல் டிராவிட் களம் இறங்கினார்.

ஆனாலும் டிராவிட் பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சை எதிர்கொள்வதில் சிரமப்பட்டார். 7 பந்துகளை எதிர்கொண்டபோதும் அவர் எந்தவொரு ஓட்டத்தையும் பெறாமலேயே ஆட்டமிழந்தார். அணியின் ஸ்கோர் 24 ஆக இருந்தபோதே டிராவிட்டின் விக்கெட் மஷ்ரப் மொராசாவினால் வீழ்த்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சச்சின் டெண்டுல்கர் களம் இறங்கி காம்பீருடன் இணைந்து ஆடினார். இருவரும் இணைந்து அணியின் ஸ்கோரை உயர்த்திக்கொண்டிருந்தபோது - காம்பீர் ரன் அவுட்டானார்.

அணியின் ஸ்கோர் 68 ஆக இருந்தபோதே இவர் ஆட்டமிழந்தார். 50 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்களை காம்பீர் பெற்றார்.

இதைத் தொடர்ந்து டெண்டுல்கருடன்



கங்கூலி களம் இறங்கி, இருவரும் பங்களாதேஷின் பந்துவீச்சுக்களைத் துவம்சம் செய்தனர். இருவரும் இணைந்து பவுண்டரிகளாக விளாசி அணியின் ஸ்கோரை உயர்த்தினர்.

ஆனாலும் அணியின் ஸ்கோர் 236 ஆக உயர்ந்தபோது கங்கூலியை பங்களாதேஷ் வீரர் பாஸ்யா போல்டாக்கினார்.

123 பந்துகளில் 13 பவுண்டரிகளுடன் 71 ஓட்டங்களை கங்கூலி பெற்றுக்கொடுத்தார். அதேநேரம் டெண்டுல்கர் தனது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

அவருடன் லக்ஸ்மன் இணைந்து ஆடிக்கொண்டிருந்தபோது இந்திய அணியின் ஸ்கோர் 291 ஆக உயர்ந்தது. அவ்வேளை லக்ஸ்மன் 39 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 32 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இவரை மொகமட் ரபீக் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்கச் செய்தார்.

இதனைத் தொடர்ந்து தினேஷ் கார்த்திக் டெண்டுல்கருடன் இணைந்தார். அவரும் 43 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 25 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். முஷிபுர் ரஹ்மானின் பந்துவீச்சில் மொராஷாவிடம் பிடிகொடுத்து அவர் தனது விக்கெட்டைப் பறிகொடுக்க நேர்ந்தது.

இதன்பின்னர் இர்பான் பதான் டெண்டுல்கருடன் இணைந்துகொண்டபோதும் - அவரால் ஒரு பவுண்டரியுடன் 5 ஓட்டங்களை மட்டுமே பெற்றநிலையில் ரபீக்கின் பந்துவீச்



சில் முஷிபுர் ரஹ்மானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

ஸ்கோர் 348 ஆக இருந்தபோது இந்த விக்கெட் வீழ்த்தப்பட்டது. இதைத்தொடர்ந்து கும்ளே களம் இறங்கி இரண்டு பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு எந்தவொரு ஓட்டத்தையும் பெறாத நிலையில் இரண்டாவது நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

ஆட்டநேரமுடிவில் சச்சின் டெண்டுல்கர் 159 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றிருந்தார். இவர் 272 பந்துகளில் 23 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

நேற்றைய ஆட்டநேரமுடிவில் இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு 348 ஓட்டங்களைப்பெற்று - பங்களாதேஷ் அணியைவிட 164 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருக்கிறது.

பந்துவீச்சில் பாஸ்யா -2, ரபீக் -2, மொராஷா -1, ரகுமான் -1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



இன்று மூன்றாவது நாள் ஆட்டம் இடம்பெறும்.

## உதைபந்தாட்ட வீரர் மரணம்; நடுவரும் இடை நிறுத்தம்!

பெங்களூரில் நடைபெற்ற பெடரேஷன் கிண்ண உதைபந்தாட்டப்போட்டியின்போது டெம்போ ஸ்போர்ட்ஸ் அணிக்காக ஆடிய பிரேசில் வீரர் மைதானத்தில் இறந்த சம்பவத்தை அடுத்து அந்தப் போட்டியின் நடுவர் இடைநிறுத்தப்பட்டிருக்கிறார்.

மோகன்பகான் அணிக்கு எதிரான இறுதிப்போட்டியில் விளையாடிய டெம்போ ஸ்போர்ட்ஸ் அணியைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ஜூனியர் மரணமான சம்பவம் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியது.

மோகன்பகான் கோல் கீப்பர் சுப்ரதா போல் பலமாக மோதியதால் அவர் இறந்ததாகக் கூறப்பட்டது. இதைத் தொடர்ந்து அவரை அகில இந்திய காற்பந்து சம்மேளனம் இடைநிறுத்தம் செய்தது.

இந்த நிலையில் அந்தப் போட்டியின்போது நடுவராகப் பணியாற்றிய பாலு என்பவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார். இதை இந்திய உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் தாஸ் முன்ஷி தெரிவித்தார். ஆடுகளத்தில் கிறிஸ்டியானோ விழுந்துகிடந்தபோது நடுவர் உடனடியாக மருத்துவ குழுவை அழைக்கவில்லை.

காலதாமதமாகவே மருத்துவர்கள் வந்தனர். நடுவர் பாலு இந்த விடயத்தில் வேகமாகச் செயற்படாததாலேயே இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

## விளையாட்டு

## கவாஸ்கரின் சாதனையை சமப்படுத்தினார் சச்சின்!

(டாக்கா)



பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் சதமடித்ததன்மூலம் இந்திய அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் இந்தியாவின் முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கரின் சாதனையைச் சமப்படுத்தினார்.

சுனில் கவாஸ்கர் டெஸ்ட் போட்டிகளில் உலகிலேயே அதிகூடிய சதங்களைப் பெற்றவீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இவர் பெற்ற 34 சதங்களை சச்சின் டெண்டுல்கரும் நேற்றுப் பெற்ற 34 ஆவதுசதம் மூலம் சமப்படுத்தினார்.

இதேவேளை, இந்தச் சதத்தின் மூலம் சச்சின் டெண்டுல்கர் இன்னொரு சாதனையையும் நிலைநாட்டினார். உலகில் டெஸ்ட் அந்தஸ்துப்பெற்ற பத்து நாடுகளுக்கு எதிராகவும் இவர் சதமடித்துள்ளார். பங்களாதேஷூடனான சதத்தின்மூலம் இந்தச் சாதனையை நிலைநாட்டினார்.

ஏற்கனவே தென்னாபிரிக்க வீரர் ஹரி கேர்ஸ்டனும், அவுஸ்ரேலிய வீரர் ஸ்ரீவ்வோவும் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

## கபில்தேவின் சாதனையை அனில் கும்ளே முறியடித்தார்!

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான அனில் கும்ளே பங்களாதேஷூடனான முதல் டெஸ்டில் ரபீக்கின் விக்கெட்டை எடுத்ததன் மூலம், இந்திய வீரர்களில் அதிக விக்கெட் கைப்பற்றிய கபில்தேவின் (434 விக்கெட்) சாதனையை முறியடித்தார். இதன்மூலம் தற்போது அதிக விக்கெட் கைப்பற்றிய இந்திய வீரராக கும்ளே உள்ளார். அவர் 91 டெஸ்டில் 436 விக்கெட்டுகள் கைப்பற்றி உள்ளார். உலக அளவில் 5 ஆவது வீரராக கும்ளே உள்ளார். கபில்தேவ் 131 டெஸ்டில் 434 விக்கெட்டுகள் எடுத்துள்ளார்.

34 வயதான கும்ளே 1990 ஆம் ஆண்டு கிரிக்கெட்டில் அறிமுகம் ஆனார். 14 ஆண்டுகளில் அவர் இந்தச் சாதனையை எட்டினார். டெஸ்டில் 500 விக்கெட்டை எடுப்பதே தனது தற்போதைய லட்சியம் என்று கும்ளே கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

கபில்தேவின் சாதனையை முறியடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. எனது கிரிக்கெட் வாழ்க்கையில் முதல் 4 ஆண்டுகள் கபில்தேவுடன் விளையாடி இருக்கிறேன். அப்போது அவரது சாதனையை முறியடிப்பேன் என்று நினைக்கவில்லை. 500 விக்கெட்டுக்கள் கைப்பற்றுவதே எனது லட்சியம். வருங்காலங்களிலும் என்னால் தொடர்ந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றமுடியும் என்று அவர் கூறினார்.

டெஸ்டில் அதிக விக்கெட் எடுத்த முதல் 6 வீரர்கள் வருமாறு -

1. வோன் (அவுஸ்ரேலியா)- 117 டெஸ்டில் 552 விக்கெட்
2. முரளீதரன் (இலங்கை)-91 டெஸ்டில் 532 விக்கெட்
3. வோல்ஷ் (மேற்கிந்தியத் தீவுகள்)-132 டெஸ்டில் 519 விக்கெட்
4. மக்ரா (அவுஸ்ரேலியா)-103 டெஸ்டில் 463 விக்கெட்
5. கும்ளே (இந்தியா)-91 டெஸ்டில் 436 விக்கெட்
6. கபில்தேவ் (இந்தியா)-131 டெஸ்டில் 434 விக்கெட்



## சம்பியன் டிரொபி ஹொக்கி
## வெண்கலப் பதக்கத்துக்காக இந்தியா - பாகிஸ்தான் மோதல்!



பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் சம்பியன்ஸ் டிரொபி ஹொக்கிப் போட்டியில் மூன்றாவது இடத்துக்காக பாகிஸ்தானுடன் இந்தியா மோதவுள்ளது. சம்பியன் டிரொபி ஹொக்கிப்போட்டி பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகரத்தில் நடைபெற்றுவருகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த கடைசி 'லீக்' ஆட்டத்தில் இந்திய அணி நியூஸிலாந்தை எதிர்கொண்டது. இந்த ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது. மற்ற ஆட்டங்களில் ஸ்பெயின் 3-0 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானையும், ஜேர்மனி 4-3 என்ற கோல் கணக்கில் ஹொலண்டையும் தோற்கடித்தன.

'லீக்' முடிவில் ஸ்பெயின், ஹொலண்ட் அணிகள் 5 ஆட்டங்களில் 4 வெற்றி, ஒரு தோல்வியுடன் 12 புள்ளிகள் பெற்றன. கோல்கள் அடிப்படையில் ஸ்பெயின் முதல் இடத்தையும், ஹொலண்ட் 2 ஆவது இடத்தையும் பிடித்தன. இந்த இரு அணிகளும் இறுதிப்போட்டியில் இன்று மோதவுள்ளன.

பாகிஸ்தான் 3 வெற்றி, 2 தோல்வியுடன் 9 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்தைப் பிடித்தது. இந்தியா, ஜேர்மனி அணிகள் ஒரு வெற்றி, ஒரு சமநிலை, 3 தோல்வியுடன் தலா 4 புள்ளிகள் பெற்றன. கோல்கள் அடிப்படையில் இந்தியா 4 ஆவது இடத்தையும், ஜேர்மனி 5 ஆவது இடத்தையும் பிடித்தன. நியூஸிலாந்து 2 சமநிலை, 3 தோல்வியுடன் 2 புள்ளி பெற்றது.

வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மீண்டும் மோதவுள்ளன. ஏற்கனவே 'லீக்' ஆட்டத்தில் இந்திய அணி பாகிஸ்தானிடம் தோற்றது. அதற்குப் பழிவாங்கும் வகையில் இன்றைய ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

5 ஆவது இடத்துக்கான போட்டியில் ஜேர்மனி - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.



# சுத்திகரிப்பு தொழிலாளர்களின் மறியல் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது

யாழ். மாநகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாததைக் கண்டித்தும், தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரியும் சுகாதார ஊழியர்கள் நேற்றும் மாநகரசபைக்கு முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குருநகர் - திருநகர் சம்பவங்களின்போது ஏற்பட்ட பதற்ற நிலைமையைத் தொடர்ந்து தமக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக, சுத்திகரிப்புப் பணியாளர்கள் தமது பணியைக் கடந்த மாதம் பகிஷ்கரித்தனர்.

தமது பகிஷ்கரிப்புக் குறித்து, ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்கப்படாததையடுத்து, கடந்த 7 ஆம் திகதி முதல் மாநகரசபை வாயில் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் - கடந்த 15 நாட்களாகத் தமது பணிகளைப் பகிஷ்கரித்து வருவதால், நகர்ப் பகுதி குப்பைகூழங்களால் நிரம்பி வழிகிறது.

இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(வ)



மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள்

## கஜமுகாசுரன் போர்

எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை கல்வயல் அருள்மிகு வேதவனவிநாயகர் ஆலயத்தில் கஜமுகாசுரன் போர் இடம்பெறவுள்ளது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வரும் விநாயகர் விரத இலட்சார்சணை விழாவில், 20 ஆம் நாளான அன்று இந்த ஆலயத்தில் முதன் முறையாக கஜமுகாசுரன் போர் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மறுநாள் விநாயகர் விரதத்தின் இறுதிநாளன்று மகா கணபதி ஹோமமும் நடைபெறும். (24)

# கேக் விற்பனை செய்தவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(பருத்தித்துறை)

தென்பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டு, போலித் தகவல்களுடன் விற்பனை செய்யப்பட்டு வந்த 300 கிராம், 250 கிராம் எடையுடைய கேக் பெட்டிகளை விற்பனை செய்த பருத்தித்துறைப் பகுதி வர்த்தகர் ஒருவருக்கு - மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், அந்தக் கேக்கை விற்பனை செய்தமைக்காக எச்சரிக்கையும் செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட உணவு மருந்துவப் பரிசோதகர் ரி.மகாதேவன்- பருத்தித்துறை நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கையடுத்து, கடந்த 6 ஆம் திகதி விசாரணையை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் இவ்வாறு தீர்ப்பு வழங்கினார்.

குறிப்பிட்ட கேக் வகைகளை விற்கக்கூடாது என வியாபாரிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(12)

## நமது ஈழநாடு செய்தியையடுத்து வீதி திருத்தம்

(கோப்பாய்)

கோப்பாய் - மானிப்பாயை இணைக்கும் 9.25 கிலோமீற்றர் நீளமான வீதி திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடை பெற்று வருகின்றன.

இந்த வீதியைச் சீராக்கும்படி அண்மையில் நமது ஈழநாடு பத்திரிகையூடாக மக்கள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(90)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஐந்து



பெயர் : கு.கம்ஸாஜினி

முகவரி : வேலணை.

# உள்ளூராட்சி மன்ற ஒழுங்கு விதிகள் குறித்த விபரங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் நடைமுறையிலுள்ள உப விதிகள், ஒழுங்கு விதிகள் பற்றிய விபரங்களை வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் கேட்டுள்ளது.

மாதிரி விண்ணப்பபடிவத்தில் வரி வருமானம், வளமுகாமை, சுற்றாடல், சுகாதாரம், தொழில், பிரதேச சபைகளின் ஒழுங்கு விதிகள், உப விதிகள் பிரேரிக்கப்பட்ட திகதிகள் என பல தரப்பட்ட விபரங்களைக் கேட்டுள்ளனர்.

சகல பிரதேச, நகர சபைகள் உடனடியாக இந்த விபரங்களைத் அனுப்பிவைக்குமாறு வடக்கு - கிழக்கு ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி அனைத்து உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களையும் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(91)

# டச்சு வீதியை புனரமைக்குமாறு பிரதேச சபையிடம் கோரிக்கை

(வலிகாமம்)

வலிகாமம் தெற்கு - மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட டச்சு வீதியைப் புனரமைத்துத் தருமாறு யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் பிரதேச சபையினரைக் கேட்டுள்ளார்.

இந்த வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகவுள்ளது.

இதையடுத்து உடுவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட விவசாய வீதியான டச்சுவீதி புனரமைக்க பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளது, (91)

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ------------------------------

முகவரி : ------------------------------

பிறந்த ஆண்டு: ------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------

பெற்றோர் ஒப்பம்

# டெங்கு நுளம்புகளை அழிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுகாதாரப்பகுதித் தொண்டர்களால் பல இடங்களில் டெங்கு நோயைத் தடுப்பதற்கான கருத்தரங்குகளும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் நெல்லியடி, இராசகிராமப் பகுதியில் டெங்கு நுளம்பின் செறிவு அதிகமாகக் காணப்பட்டதையடுத்து, அந்தப் பகுதியில் குடம்பிக் கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்தப் பகுதியில் எதிர்வரும் 14 ஆம திகதி செவ்வாய்க்கிழமை முதல் - டெங்கு நுளம்புக் குடம்பிகளைப் புகையூட்டி அழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக, பருத்தித்துறை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி எஸ்கதர்வேற்பிள்ளை தெரிவித்தார். (12)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கடற்தொழில் உபகரணங்கள் அன்பளிப்பு

(பொன்னாலை)

பொன்னாலை, தொல்புரம் ஆகிய கிராமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெயர்ந்து வசிக்கும் 18 பயனாளிகளுக்கு, கடற்தொழில் உபகரணங்களை வழங்க மூவி மெண்டோ நிறுவனம் முன்வந்துள்ளது.

இவற்றில் இரண்டு பேருக்கு ஒரு வள்ளம் என்ற அடிப்படையில், 6 பேருக்கு 3 வள்ளங்களும், எஞ்சியோருக்கு மீன்பிடி வலைகளும் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன.

(207)

## பிரதேச சபையால் தண்ணீர்த்தாங்கி கையளிப்பு

திருநெல்வேலி சந்தையினுள் அமைக்கப்பட்ட தண்ணீர்த்தாங்கியின் கட்டடவேலைகள் பூர்த்தியாகி, ஒப்பந்தகாரர்களால் நல்லூர் பிரதேசசபையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக வியாபாரிகளுக்கும், சந்தைக்குப் பொருட்கள் வாங்க வரும் பொதுமக்களுக்கும் இருந்து வந்த குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்துவிடும் என வியாபாரிகளும், பொதுமக்களும் தெரிவித்தனர். (63)

## கலைமுகம் சஞ்சிகை வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்படும் ‘கலைமுகம்’ சஞ்சிகையின் புரட்டாதி - மார்கழி மாத இதழ் வெளியாகியுள்ளது.

சங்கீத ஆசிரியை பத்மலோஜினி குணராசசிங்கத்தின் நேர்காணலுடன், ராஜேஸ்வரன், நெல்லை நடராஜா, ஞானதீபன் ஆகியோரின் கட்டுரைகளும் - வி.கௌரிபாலன், இனியவன், தத்ருமலிங்கம் ஆகியோரது சிறுகதைகளைத் தாங்கி, இந்தச் சஞ்சிகை வெளியாகியுள்ளது. (91)

## புதிய நிர்வாக தெரிவு

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை - ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு - இன்று காலை 6 மணிக்கு நிலையத் தலைவர் க.தம்பிராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. அத்துடன் ஆறுகால்மடம் அரசடி வைரவர் கோயில் பரிபாலன சபை நிர்வாகத் தெரிவும் இந்தக் கூட்டத்திலேயே இடம்பெறும்.

(91)

## வீதிப் புனரமைப்பு பணிகள் பூர்த்தி

(தொல்புரம்)

தொல்புரம் திக்கரை வீதியும், சுழிபுரம் காளுவன்சந்தி - ஐக்கிய சங்கப் பாடசாலை வீதியும் புனரமைப்புச் செய்யப்பட்டு, பணிகள் யாவும் நிறைவுபெற்றுள்ளன.

பல வருடங்களாகத் திருத்தப்படாதிருந்த இந்த வீதிகளின் புனரமைப்புப் பணிகளே அண்மையில் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. (207)

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் மஹோற்சவம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மார்கழிமாத வருடாந்த மஹோற்சவம் - எதிர்வரும் 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறும். 9 ஆம் நாளான எதிர்வரும் 22 ஆம் திகதியன்று இரதோற்சவம் நடைபெறும். இரதோற்சவ தினமாகிய (வைகுண்ட ஏகாதசி தினத்தன்று) காலை 5.30 மணிக்கு “சுவர்கக வாசல்” தரிசனம் இடம்பெறும். (207)

## நல்லை ஆதீனத்தில் இசை நிகழ்வு

நல்லை திருஞானசம்பந்த ஆதீனம் நடத்தும் - மாதாந்த இசை நிகழ்வு, இன்று மாலை 5 மணிக்கு ஆதீன கலாசார மண்டபத்தில் சுன்னாகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் உப அதிபர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

நெடுந்தீவுப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 11.30 மணிக்கு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ம.பற்றிக்டிறஞ்சன் தலைமையில் இடம்பெறும் இந்தக் கூட்டத்தில் - கல்வி, சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து, மீன்பிடி, விவசாயம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

(113)

# கட்டாக்காலி கால்நடைகள் கோண்டாவிலில் அதிகரிப்பு

(கோண்டாவில்)

கோண்டாவில் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகள் அதிகரித்துள்ளன. இதனால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வாறு அதிகரித்த கட்டாக் காலி கால்நடைகள் - கோண்டாவில் கிழக்கு வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தின் முன் தஞ்சமடைந்திருப்பதால், ஆலயச்சூழல் தூய்மையற்று, துர்நாற்றம் வீசுகிறது.

இதனால் ஆலயத்துக்கு வரும் அடியார்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறையீடு செய்தும், எந்தவித பயனும் இல்லையென இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (82)

# மணல் ஏற்றிய கன்ரர் வாகனம் இனந்தெரியாதோரால் தீ வைப்பு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் தொடர்ச்சியாக மணல் ஏற்றிய கன்ரர் வாகனமொன்று - நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் இனந்தெரியாதோரால் தீ வைத்து எரிக்கப்பட்டதுடன், அதன் சாரதியும் மோசமான முறையில் தாக்கப்பட்டு தூக்கி வீசப்பட்டார்.

நாவற்குழிச் சந்திக்கு அண்மையிலுள்ள மணல் திட்டியொன்றில் மணல் ஏற்றிக்கொண்டிருந்த சமயம், அங்கு சென்ற இனம்தெரியாத நபர்களால், பெற்றோல் ஊற்றப்பட்டு வாகனம் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது, மணல் ஏற்றிக்கொண்டு நின்றோர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனையடுத்து, அவர்கள் தப்பியோடி விட்டனர்.

கன்ரர் வாகனத்தின் சாரதி தாக்கப்பட்டு, எரிந்துகொண்டிருந்த வாகனத்தின் பெட்டிக்குள் தூக்கி வீசப்பட்டார்.

தீக்காயங்களுக்குள்ளான சாரதி - சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. (34)

# உயர்தரம் நிரந்தரம்




2004 ஆம் ஆண்டு நவம்பர் 4 முதல் 13 வரை கிரேக்க நாட்டில் நடைபெற்ற உலக இளைஞர் சதுரங்க சம்பியன் ஷிப் போட்டிகளில் எம்மண்ணின் புதல்வியும் பங்கேற்றார் என்பது எமக்கெல்லாம் பெருமை தரும் விடயமாகும். காங்கேசன்துறை தையிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட வித்தியாரணி சிவகுருநாதன், இடம் பெயர்வால் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் கற்று பின்னர் யா/ இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலையில் பயின்று, தற்போது வேம்படி உயர்தர மகளிர் பாடசாலையில் இடை நிலைக் கல்வியைத் தொடர்ந்து க.பொ.த உயர்தர கணித பிரிவில் பயின்று கொண்டிருக்கிறார்.

இவர் தரம் ஏழில் கற்கும் போது முதன் முதலாக ஆசிரியை சுகந்தி கண்ணன் மூலம் சதுரங்க விளையாட்டுக்கு அறிமுகமாகியதை நினைவு கூருகிறார். இவரது மூத்த சகோதரர் இவருக்கு நிறைய வழிகாட்டியிருப்பது தெரியவருகிறது. மேலும் இரண்டு தம்பிகளுடன் கூடிச் சதுரங்கம் விளையாடியது இவரது திறனை வளர்க்க நிறைய உதவியிருக்கிறது. 2002 ஆம் ஆண்டில் இவர் தேசியமட்டத்தில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெற்றுச் சென்று தொடர்ந்து 2003, 2004 ஆம் ஆண்டுகளில் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு கொண்டுள்ளார். 2004 இல் 18 வயதுப் பெண்கள் பிரிவில் 2 ஆம் இடம் பெற்றமை இவரது எழுச்சியின் ஒரு படியாகக் காணலாம்.

# விளையாட்டு அரங்கம்



ஒரு விடயத்தை இவர் கூறும் போது பலவித உணர்வுகளுக்கு உள்ளாவது தெரிகிறது. கிரேக்கத்துக்குப் போவதற்குப் பலரது எதிர்ப்புக்கள் இருந்த போதும் நல்ல மனங்கள் செய்த உதவியால் எல்லாத்தடையும் நீங்கி கிரேக்கத்தில் கால் பதித்தேன் என்கிறார். கசப்பை மறந்து முகமலர்ச்சியுடன் பேசும் வித்தியாரணி தனக்குதவியவர்களைப் பட்டியல் போடுகின்றார். இந்தப் பட்டியலே முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது என்பது விளையாட்டரங்கின் கருத்து.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை பழைய மாணவியர் சங்கம் கடவுச்சீட்டு, விமானச் செலவு, மற்றும் வேறு சில செலவுகளையும் ஏற்றிருக்கிறார்கள். உள்நாட்டுப் போக்குவரத்துச் செலவுகள் அனைத்தையும் ஹற்றன் நஷனல் வங்கி பொறுப்பேற்றிருக்கிறது. வெளிநாட்டின் அனைத்துச் செலவுகளையும் தமிழீழ விளையாட்டுத்துறையினர் பொறுப்பேற்றிருக்கிறார்கள். இன்னும் இவர் இடுகின்ற பட்டியலின் பெயர் மிக நீளமானது.

தனது சதுரங்க விளையாட்டு உத்வேகத்துக்குக் காரணமானவர்களைப் பின்வருமாறு பட்டியலிடுகிறார் வித்தியாரணி. தமிமீழ மாணவர் பேரவை, தமிழீழ விளையாட்டுத்துறையினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர், சர்வதேச மாணவர் பேரவை, யாழ். பல்கலைக்கழக உடற் கல்வித்துறை, யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வேம்படி கல்விச் சமூகம் என்றவாறு நீண்டு செல்கிறது பட்டியல். அவரது திறமையையிட்டுக் கேட்டால் - அவர் தனது திறமைக்குக் காரணமானவர்களை உதவிக்கரம் நீட்டியோரை முதன்மைப் படுத்துவதே முதன்மையானது என்ற ரீதியில் சிந்திப்பதையே அவரது கருத்துக்களில் இருந்து பெறமுடிந்த உண்மையாக இருக்கிறது.

இத்தனை கரங்கள் இணைந்து எமது மண்ணின் பெருமைமிக்க இளம்யுவதி- இன்னும் பாடசாலை மாணவி ஒருவரை உயரத்தூக்கி விட்டிருப்பதைக் காணும் போது மகிழ்ச்சி உண்டாகிறது. கிலேசமுற்றிருந்த மனங்களுக்கு இந்தச் செய்தி ஒரு ஆறுதல் தரும். அத்தோடு கூட பெரு நம்பிக்கையைத் தரும் செய்தியும் ஒன்று இங்கு கூறப்படுகிறது. உண்மையான திறமையெனில் எம் மண்ணின் கரங்கள் அந்தத் திறமைசாலியை உயர்த்தத் தம் கரங்களைச் சேர்த்துக் கொள்ளும் என்பதே அது.

– நிர்மலன்.

# சரிந்து நிற்கிறதே தராசு




சிம்பாப்வே அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரை எதிர்பார்த்தபடியே, இலகுவாக வென்று, கிண்ணத்தைக் கைப்பற்றியது இங்கிலாந்து அணி. சிம்பாப்வேயில் வெள்ளை இனத்தவருக்கெதிரான அடக்குமுறை நிகழ்வதாகக் குற்றஞ்சாட்டி இங்கிலாந்து அணியின் முன்னணி வீரர்களான பிளின்ரொப், ட்ரெஸ்கொதிக், ஹார்மிசன் ஆகியோர் இந்தத் தொடரிலிருந்து விளையாடாமல் ஒதுங்கிக் கொண்டனர்.

சர்வதேச கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில், போட்டி அட்டவணை முதல் விதிகளை உருவாக்குதல், நடுவர்கள், போட்டி நடுவர்களை நியமிப்பது வரை அனைத்து விடயங்களையும் சர்வதேச கிரிக்கெட்சபையே ஒழுங்குபடுத்தி வருகின்றது.

அவ்வப்போது தலைதூக்கிய வீரர்களுடனான விளம்பர ஒப்பந்தம், பாதுகாப்பைக் காரணம் காட்டிச் சுற்றுப் பயணங்களை ரத்துச் செய்வது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளையும் அது திறம்படவே கையாண்டு வந்துள்ளது, என்றால் அது மிகையில்லை.

சிம்பாப்வேயின் விடயத்தில் ஆரம்பத்தில் காலத்தை இழுத்தடித்தாலும், சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இதுபற்றி ஆராய்ந்து "சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் இனவாதம் இருப்பதாகத் தெரியவில்லை" என ICC அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

கிரிக்கெட்டில் ICC எடுக்கும் சில முடிவுகள் சட்டாம்பிள்ளைத்தனமாக இருந்தாலும், அதை ஏற்றுக்கொள்வது ஒவ்வொரு வீரரதும் கடமையாகும். ஒரு போட்டியில் நடுவர் தவறான முடிவொன்றை வழங்கியிருந்தாலும், அந்த முடிவைச் சம்பந்தப்பட்ட வீரர் எந்தவித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ICC எதிர்பார்க்கிறது.

மாறாக அந்த முடிவைக் குறிப்பிட்ட வீரர் விமர்சிப்பாராயின், ICCஆல் நியமிக்கப்பட்ட போட்டி நடுவர் நிர்ணயிக்கும் தண்டனைக்கு ஆளாக வேண்டிவரும். இதனை அண்மைக் காலமாக நடைபெற்றுவரும் சில போட்டிகளில் அவதானித்துப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

உதாரணத்துக்கு, இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே கொல்கத்தாவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் - கங்கூலி நடுவர் டரெல் ஹாப்பருடன் வாக்குவாதப்பட்டதற்காக, போட்டி நடுவர் ஜெப் குறோவ் போட்டிப் பணத்தின் 30 வீதத்தைத் தண்டப்பணமாகச் செலுத்துமாறு உத்தரவிட்டதையும்,

சென்றமாதம் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே கராச்சியில் நடந்த டெஸ்ட் போட்டியில் கிரிக்கெட் விதிகளை மீறியதாகத் தெரிவித்து, 30 வீதத்தைத் தண்டப்பணமாகச் செலுத்திய சங்ககாரவையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.




நாம் இங்கு கேட்கவருவது என்னவென்றால், ICC ஆல் நியமிக்கப்பட்ட நடுவர்களினது தீர்ப்புக்கு மதிப்பளிக்காமலும், சர்வதேச கிரிக்கெட் விதிகளுக்கு மாறாகவும் நடந்துகொள்ளும் வீரர்களுக்கு இந்தத் தண்டனை விதிக்கப்படுமென்றால் - சிம்பாப்வேயில் இனவாதம் இல்லையென்று அறிக்கை வெளியிட்ட ICC யைப் புறக்கணித்து அங்கு செல்லாதுவிட்ட வீரர்களின்மீது ICC என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்பதுதான்!

இந்த நிலையில், இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டனான மைக்.ஆதட்ரன் ICC இங்கிலாந்து அணியின் சிம்பாப்வே பயண விடயத்தில்மட்டும் ஏன் ஓரவஞ்சகம் செய்தது என்பது எனக்குப் புரியவில்லை என்று கூறியிருக்கிறார்.

கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் சிம்பாப்வே அதிபர் முகாபேயின் ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அங்கு செல்லாத அவுஸ்ரேலிய அணிகூட, ICC யின் சிம்பாப்வே பற்றிய அறிக்கை வெளிவருவதற்கு முன்னரே இந்தவருட நடுப்பகுதியில், அனைத்து முன்னணி வீரர்கள் உள்ளடங்கலாகச் சென்று அங்கு ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே, ICC இங்கிலாந்து அணிக்கு ஓரவஞ்சகம் செய்தது என்று மைக்.ஆதட்ரன் புலம்புவது ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றல்ல.

இங்கிலாந்துக்காரர்கள் நிற வேற்றுமை பார்க்காது திறமைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அதற்கு அலெக்ஸ் ரியூடர், கிளட்ஸ்டன் ஸ்மோல் போன்ற கறுப்பின வீரர்கள் அணியில் இடம்பெற்றதைச் சுட்டிக்காட்டலாம்.

இவ்வாறு சிம்பாப்வே வீரர்கள் விடயத்தில் நடந்து கொள்வதுதான் ஆரோக்கியமான கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

-விமலன்.

# இளமையின் சுமைகள்

90 களின் பிற்பகுதியில் ஆடவர் ரெனிஸ் வீரர்கள் பற்றிப் பேசும்போது முதலிடம் வகிப்பவர் பீட் சாம்பிறஸ். இவர் 1993 க்கும் 1998 க்கும் இடைப்பட்ட காலத்தில் சாதனை எண்ணிக்கையாக ஆறு முறை தரவரிசையில் முதலாம் நிலையில் இருந்தவர். இவர் தற்போதைய ஆடவர்ரெனிஸ் நட்சத்திரம் றொஜர் பெடரர் பற்றித் தன் கருத்துக்களைக் கூறியுள்ளார். றொஜர் பெடரர் இந்தவருடம் மட்டும் மூன்று GRAND SLAMS உட்பட நான்கு GRAND SLAMS ஐ தன்வசம் வைத்திருப்பவர். இவர் பீட்சாம்பிறஸின் மொத்தச் சாதனை எண்ணிக்கையான பதினான்கு GRAND SLAMS ஐ தாண்டுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப் படுகின்றது. 33 வயது நிறைந்த பீட்சாம்பிரஸ் 23 வயதே நிறைந்த றொஜர் பெடரர் பற்றிய இந்தக் கருத்தைத் தான் ஏற்றுக் கொள்வதாகக் கூறுகின்றார். எனது விளையாட்டுப் பாணி பெடரரிடம் இருப்பதை நான் காண்கிறேன். மேலும் சக்தியை பெருமளவில் விரயமாக்காத வகையில் உயர் தரமான விளையாட்டை வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்கவர் இவர் என்கிறார் அவர்.




சாம்பிறஸ் தற்போதைக்கு அமைதியாகத் தன் குடும்பத்துடன் இருப்பதையே விரும்புவதாகக் கூறுகின்றார். சிரேஷ்ட வீரர்களின் பட்டியலில் தன்னை இணைத்து ரெனிஸ் போட்டிகளில் ஆடத் தனக்கு பல தரப்பில் இருந்தும் அழைப்புகள் வருவதாகக் கூறும் இவர், அந்தப் பட்டியலில் நான் சேர்வதற்கு இன்னமும் நீண்ட காலம் இருக்கிறது என்பவர், நான் ரெனிஸ் விளையாட்டில் வெறுப்படைந்து விட்டேன் என்று எண்ணி விடவேண்டாம். எனக்கு புகழையும் பொருளையும் ஈட்டித் தந்த ரெனிஸ் விளையாட்டை நான் வெறுக்க முடியாது. ஆனால் நிறையக் களைத்துவிட்டேன். விளையாடும் நாட்களில் நான் ஓர் இரவு கூட நிம்மதியாக உறங்கியதில்லை. ஏனெனில் நாளைய தினம் எந்த முக்கிய ஆட்டத்தில் விளையாட வேண்டுமோ, எந்த விமானத்தைப் பிடிக்க நேருமோ என்பதை நினைத்தாலே உறக்கம்வராது என்று தன் கடந்த காலப் பெருமை, புகழ் என்பவற்றின் பின்னால் இருந்த துயரத்தையும் எடுத்துக் கூறுகின்றார். றொஜர் பெடரருக்கும் இந்த விடயங்கள் எட்டாமல் இருந்திருக்காது. சாம்பிறஸ் பெடரருக்கு ஒரு நல்முத்திரை பதித்துவிட்டார். இனி எதிர்வரும் காலங்களில் றொஜர் பெடரரைத் தேடிப் பல புகழ் மாலைகள் பெருமைகள் வந்து கொண்டேயிருக்கும். ஆனாலும் நிம்மதியான நித்திரை என்பது அவரை விட்டுத் தூரப்போய்க் கொண்டே இருக்கும்.

– லலி.



# விருதுக்கு இவனால் பெருமை



ஜெஸி ஓவன்ஸ் கருமைநிறக் கண்ணா

ஜெஸி ஓவன்ஸ் விருதுகள் 1981 அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த விருதுகள் அமெரிக்க நாட்டின் தலைசிறந்த ஆண், பெண் தடகள வீரர்களுக்கு வழங்கப்படுவதாகும். 2004 ஆம் ஆண்டுக்கான ஜெஸி ஓவன்ஸ் விருதைப் பெற்றுக் கொள்ளப் போகிறவர்கள் ஆண், பெண்பிரிவில் ஜஸ்ரின் கெட்லின் பெண்கள் பிரிவில் ஹெய்ஸ் ஆசிய இருவருமாகும்.



ஜோஹானா ஹெய்ஸ் உலகின் எல்லை

கெட்லின் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டத்தை 9.85 செக்கனில் நிறைவு செய்து தங்கம் வென்றவர். இவரால் குறுந் தூர ஓட்டத்தில் பின்தள்ளப்பட்டவர்கள் போத்துக்கல் நாட்டின் பிரான்ஸிஸ் ஒபிக் வெலு (9.86 செக்கன்) அமெரிக்காவின் மொறிஸ் கிறீன் (9.87 செக்கன்) இதைவிட 200 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கமும் பெற்றவர். இந்த வகையில் 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் தடகள நிகழ்வுகளில் மூன்று பதக்கம் பெற்றவர் இவர் ஒருவரே.

மறுபுறம் மகளிர் பிரிவில் ஜோஹானா ஹெய்ஸ் இருபத்தேழு வயதாகும் இவர், 100 மீற்றர் தடைதாண்டலில் தங்கம் வெல்ல எடுத்துக் கொண்ட நேரம் 10.37 செக்கன். இதில் உள்ள சிறப்பு 16 வருடங்களுக்கு முன் நிலை நாட்டப்பட்ட 10.38 செக்கன் என்ற சாதனையை முறியடித்திருக்கிறார். அத்தோடு ஒலிம்பிக் போட்டிகளில் 400 மீற்றர் தடை தாண்டலில் தங்கம் வென்ற இரண்டாவது அமெரிக்கப் பெண்மணி யும் இவரே.



ஜஸ்ரின் கெட்லின் சிகரத்தின் உச்சி

இந்த இருவருமே ஜெஸி ஓவன்ஸ் விருது பெறுவததென்பது பெரும் பாக்கியம் என்று கூறியிருக்கிறார்கள். இந்தளவு முக்கியத்துவம் வாய்ந்த ஜெஸி ஓவன்ஸ் யார்?

1935 மே 25 ஆம் திகதி அமெரிக்க நாடளாவிய போட்டிகளில் மூன்று உலக சாதனைகளை முறியடித்து, நான்காவதைச் சமன் செய்தார். இந்த நான்கு நிகழ்ச்சிகளும் நடைபெற்றது 70 நிமிட நேரத்திற்குள் என்பது சிறப்பு.

**1936 பேர்லின் ஒலிம்பிக் போட்டிகள்:-**

இவர் வென்றது நான்கு தங்கப்பதக்கங்கள்.

**100 மீற்றர் 10.3 செக்கன் (உலக சாதனை சமப்படுத்தப் பட்டது)**

**200 மீற்றர் 20.7 செக்கன் (உலகசாதனை)**

**4X400 மீற்றர் அஞ்சலோட்டம்:-**

**முதலாவது ஓட்ட வீரர் 39.8 செக்கன்**

**(ஒலிம்பிக் மற்றும் உலக சாதனை நேரம்)**

ஒரு ஏழையாகப் பிறந்த இவர் வசதிகள் வந்தபோது, தனது இறுதிக்காலம் வரை வருடாவருடம் ஒரு புதுக் கார் வாங்குவாராம். அதேபோல தனக்கும் பெற்றோருக்குமாக பிரமாண்டமான வீடுகளும் வாங்குவாராம்.

**- மரியா.**

# தனிவழி நல்வழி



கங்கூலி தேவைதான் ஆக்ரோஷம்

எங்கேயோ ஏதோ ஒரு பிழை இருக்க வேண்டும். அப்படி ஏதும் இல்லாவிட்டால் இலங்கை – இந்திய கிரிக்கெட் வீரர்கள் உலகத்திலேயே திருத்தவே முடியாத பிரகிருதிகளாக இருக்கவேண்டும் என்று சாகசமாகக் கட்டுரையை ஆரம்பித்திருக்கிறார் ஒரு விளையாட்டு விமர்சகர். இவரது அலசல்கள் மிக நியாயபூர்வமாக இருப்பதுடன் வெள்ளையரல்லாத கிரிக்கெட் சமுகம் தனக்கென ஒரு தனிவழியைத் தேடிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் சிந்திக்க வைக்கிறது.

2004 ஆம் ஆண்டில் ICC யின் ஆட்ட மத்தியஸ்தர்களால் தண்டிக்கப்பட்டவர்களில் ஏழு பேர் இந்திய வீரர்கள், நான்கு பேர் இலங்கை வீரர்கள். அதிலும் ICC யின் சட்ட ஒழுக்கக் கோவையின் படி மிகப் பாரதூரமான குற்றம் செய்தவர்கள் என்று கருதப்படுபவர்கள் குமார் சங்ககார, சௌரவ் கங்கூலி. இந்த இருவரும் தலா மும்முறை *கெட்டவர்கள்* என்று முத்திரை குத்தப்பட்டுள்ளார்கள்.

இங்கு எழும் வினா இதுதான். ICC எல்லாக் கிரிக்கெட் வீரர்களையும் ஒரே தராசில் வைத்து நிறுக்கிறதா அல்லது ஒருகண்ணில் வெண்ணெயும் ஒரு கண்ணில் சுண்ணாம்பும் என்று நடக்கிறதா என்பது தான். இந்த வருடம் பெப்ரவரியில் தம்புள்ளவில் நடைபெற்ற அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் போது, நடுவர் பீற்றர் மனுவலால் அன்ரூ சைமன்ட்ஸ் LBW முறையில் ஆட்டமிழந்தார் என்று அறிவித்தபோது, சைமன்ட்ஸ் மைதானத்தை விட்டு அகலவில்லை. மேலும் துடுப்பில் பந்துபட்டது என்று நடுவரிடம் சைகையில் காட்டியதுடன், சில வார்த்தைப் பிரயோகங்களையும் செய்துள்ளார். இந்த விடயம் பெரிதும் கண்டு கொள்ளப்படாமலே போய்விட்டது. காரணம் சைமன் ட்ஸ் வெள்ளைத் தோல் கொண்டவராக இருந்ததாக இருக்கலாம்.

இந்த வருடம் ஒக்ரோபர் 31 ஆம் திகதி இலங்கை பாகிஸ்தான் இரண்டாவது டெஸ்டின் நான்காவது நாள் இலங்கையின் தோல்வியைத் தடுக்கும் ஒரு நிர்ப்பந்தத்தில் ஆடிக் கொண்டிருந்த சங்ககார, 138 ஓட்டங்கள் பெற்ற நிலையில் அனாவ சியமாக ஆட்டமிழந்தார். இதனால் தன்மீதே தான் கோபப்பட்டு துடுப்பை மேலெறிந்து பிடித்துக்கொண்டார். இது ICC யின் கண்களுக்கு கிரிமினல் குற்றமாகத் தென்பட்டுவிட்டது. முற்சொன்ன இரண்டு விடயங்களும் உண்மையைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகிறது என்பது விளங்கும்.

நவம்பர் 13 ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்தியக் கிரிக்கெட் பவளவிழா ஆட்டத்தில் மோதிக் கொண்ட நாடுகளில் இந்தியாவும், பாகிஸ்தானும் இந்த ஆட்டத்தில் பந்து வீச்சு ஓவர்களைத் தாமதமாக வீசி நேரத்தைப் போக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட கங்கூலி ஆட்ட மத்தியஸ்தர் கிளைவ் லொயிட்டால் கடும் தண்டனைக்குள்ளாக்கப்பட்டார். அது தொடர்ந்து வந்த தென்னாபிரிக்க அணியுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் கங்கூலி விளையாடத் தடையென்றளவில் வந்து முடிந்தது.

(இந்த முடிவு பின்னர் மாற்றப்பட்டது. கிளைவ் லொயிட்டின் முடிவுகள் மறு பரிசீலனையின் பின் மாற்றப்பட்டமை, இது இரண்டாவது முறையாகும். இந்தச் சம்பவம் கிளைவ் லொயிட்டுக்கு அவமானகரமான சம்பவமும் ஆகும்.)



சங்ககார சரணடைவதா? கூடாது

இதற்கு முன்னராக டரன்லீமன் ஒரு முறை இலங்கை வீரர்களை நிறத்தைக் குறிப்பிட்டு கேவலப்படுத்தினார். இதுகிளைவ் லொயிட்டுக்கு பெரிய குற்றமாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் தான் கறுப்பினத்தவன் என்ற தாழ்வுச் சிக்கலாக இருக்கவேண்டும் அல்லது வெள்ளை இனத்துக்குச் சலாம் போட்டுப் பழகிய பயமாக இருந்திருக்க வேண்டும்

(இருந்தும் பின்னர் மைக் புறொக்டர் – டரன் லீமனுக்கு ஐந்து ஆட்டங்களில் விளையாடத் தடைசெய்தார்.)

அண்மையில் நடைபெற்ற அவுஸ்ரேலிய – நியூஸிலாந்து டெஸ்ட் போட்டியின் போது தொடர்ந்தும் ஷேன் வோன் LEG திசையிலே பந்து வீசி துடுப்பாட்ட வீரருக்கு நியாயமற்ற முறையில் நடந்துகொண்டார். இதனால் நடுவர் அலீம் தார் WIDE BALL என்று இவரது பந்து வீச்சை ஒரு முறை கூறினார். இதனை எதிர்த்து ஷேன்வோன் நடுவருடன் வாயாடல் புரிந்துள்ளார். இது கண்டுகொள்ளப் படவில்லை.

இன்னொரு சம்பவத்தில் கிறெய்க் மக்மிலன் அவுட்டானபோதும் வெளியேற எண்ணா சூழ்நிலையில் கில்கிறிஸ்ட், மக்மிலன் வெளியேற வேண்டும் என்று கூறியுள்ளார். அதோடு துடுப்பாட்டப் பயிற்சி பெறு, வேறு வேலைதேடு என்றெல்லாம் கடிந்து கொண்டுள்ளார். ஆனால் இது ஆட்ட மத்தியஸ்தருக்குப் பிழையாகத் தெரியவில்லை. காரணம் கில்கிறிஸ்டின் நிறமாகத் தான் இருந்திருக்க வேண்டும்.

இங்கு எடுத்துக் காட்டப்பட்டவை ஒரு சில உதாரணங்கள் மட்டுமே. இவற்றை விட நிறைய சம்பவங்களை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். இப்பொழுது எழுகின்ற முக்கிய கேள்வி ஒன்றுண்டு. ஒப்பீட்டு ரீதியில் மைதானத்திலோ, வெளியிலோ வெள்ளை இன வீரர்கள் குற்றங்கள் புரிவதே இல்லையா என்பதுதான்.

ஒரு உதாரணத்துக்குப் பார்த்தால் 2004 ஆம் ஆண்டு இங்கிலாந்து வீரர்களில் சைமன் ஜோன்ஸ் மட்டுமே ஒரு தடவை தண்டிக்கப்பட்டுள்ளார். ஆனால் நடைபெற்ற சம்பவங்கள் அநேகம். அவை கண்டு கொள்ளப்படவேயில்லை.

எனவே ஒரு முடிவுக்கு வரலாம். வெள்ளை இனமென்ற உயர்வோ, பொருளாதார வளம் நிறைந்தவர்கள் என்ற மிதப்போ சில குறிப்பிட்ட நாடுகளின் கை ICC யில் ஓங்கியிருப்பது தெரிகிறது. இதனால் தடி எடுத்தவன் தண்டல் காரன் பாணியில் ஏனைய நாடுகள் இரண்டாம் தரத்தில் வைத்து நடத்தப்படுவது தெரிகிறது. இதில் என்ன துயரமென்றால் கறுப்பின அல்லது நிறம் குறைந்த உத்தியோகத்தர்கள் இவற்றுக்கு எதிர்க்குரல் கொடுக்காமல் தமது வசதி, வாய்ப்புக்களுக்காகத் தன் இன வீரர்களையே காட்டிக் கொடுத்துக்கொண்டிருப்பது தான் வேதனை. சர்வதேசக் கிரிக்கெட்டில் கூட – ஒரு பிரிந்து செல்லும் விதை ஒன்று துளிர்க்க ஆரம்பித்திருப்பது தெரிகிறது. அதில் ஏதும் தவறென்று சொல்லவும் முடியவில்லை.

**– ஜோசப்கிருஷ்ணா.**

# புதிய பார்வையின் பலன்

இந்திய வம்சாவளியினர் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியில் அங்கம் வகிப்பது ஒன்றும் புதிதல்ல. அதேபோல இங்கிலாந்து அணியிலும் அங்கம் வகிப்பதையும் காணலாம். தென்னாபிரிக்காவில் இந்திய வம்சாவளியினர் அந்தநாட்டுச் சனத்தொகையில் முக்கிய இடம் ஒன்றை வகித்து வரும் நிலையில் உள்ளார்கள். எல்லாத் துறைகளிலும் பரந்தளவில் கலந்துகொண்டாலும், சர்வதேச ரீதியில் கலந்துகொள்ளும் நிலை இப்போதான் ஏற்பட்டு வருகிறது. இந்த வகையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் முதன் முதலாக ஒரு இந்திய வம்சாவளி ஒருவர் இடம் பிடித்துள்ளார். அவர்தான் 21 வயது நிறைந்த ஹசீம் அம்லா. மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரராக மிளிரும் இவர், தென்னாபிரிக்க 19 வயதிற்குட்பட்ட அணி மற்றும் தென்னாபிரிக்க A அணி ஆகியவற்றில் சிறப்புற விளையாடியிருக்கிறார். உள்ளூர் கிரிக்கெட் ஆட்டங்களில் எட்டுப்போட்டிகளில் நான்கு சதம் அடித்தது, இவரது சர்வதேசப் பிரவேசத்துக்கான கதவுகளைத் திறந்தது. குவாசுலு நேட்டால் பிராந்தியத்தின் கிரிக்கெட் அணித் தலைவராகவும் இளம் வயதிலேயே இவர் பொறுப் பேற்றுள்ளார். இப்போது முதன் முறையாக இந்தியா வந்துள்ள அம்லா, இந்தியாவின் பன்முகத் தன்மை, அதன் கலாசாரவளம் கண்டு பிரமித்துப் போயிருக்கி றார். இவரது பாட்டனார் 1927 இல் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இருந்து தென்னாபிரிக்க நாட்டில் குடியேறியவர். இப்பொழுது பேரன் இந்தியா வந்திருக்கிறார். இந்தியாவில் கிரிக்கெட் ஆட்டம் பார்க்க மைதானத்தில் கூடும் ரசிகர் கூட்டம் அம்லாவுக்குப் பெரும் பிரமிப்பை ஏற்படுத்துகின்றது.



ஹசீம் அம்லா நிரந்தரம் அவசியம்

இஸ்லாமியரான இவர் தனது மார்க்கத்துக்கு விரோதமாக மதுபான நிறுவன சின்ன மொன்றை அணிந்து கொள்ள மறுத்திருக்கிறார். இந்தமுறை தென் னாபிரிக்க கிரிக்கெட் அணியின் அனுசரணையாளர்களாக விளங்கியவர்கள் ஒரு பியர் கம்பனியினர். தனது மார்க்கத்துக்கு விரோதமான செயலை நான் செய்யமாட்டேன் என்று கூறியிருக்கிறார் அவர். இந்தமுறை இந்திய விஜயம் மிகக் குறுகிய காலவரையறையில் அமைந்ததால் இந்தியா பற்றி விபரமாக அறிந்து கொள்ள இயலவில்லை என்பவர், மீண்டும் இந்தியா வரவிருப்பதாகக் கூறுகிறார். தென்னாபிரிக்க அணிவீரர்கள் தற்போது கோட்டாமுறையில் அணிக்குள் உள்வாங்கப்படுவதால் கறுப்பின, கலப்பின வீரர்களுக்கும் தற்போது இடம் கிடைக்கிறது. இந்தவகையில் தான் தென்னாபிரிக்க விக்கெட் காப்பாளர் மார்க் பவுச்சர் நீக்கப்பட்டு, டிசேலகிலி என்ற கறுப்பினத்தவர் இந்தியா வந்த அணியில் அந்த இடத்தை நிரப்பி யிருந்தார். எதிர்காலத்தில் வெள்ளையர் தவிர்ந்த ஏனைய இன வீரர்களுக்கு தென்னா பிரிக்க அணியில் முக்கிய இடம் கிடைக்கப் போகிறது என்பதற்கு அடையாளங்கள்தான் இவை.

**– ஜெயந்தி.**

## அமெரிக்க விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது

ஐக்கிய அமெரிக்கா விளையாட்டு கழக அணியினருக்கும், மன்னார் விளையாட்டுக் கழக அணியினருக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த வியாழக்கிழமை மன்னார் பொது விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இதில் ஐக்கிய அமெரிக்க விளையாட்டு அணி மன்னார் அணியை 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

மன்னார் உதைப்பந்தாட்ட சம்மேளனமும் Sportsman in Action என்ற அமைப்பும் இணைந்து இந்த உதைபந்தாட்டப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொழில்சார் உபகரணங்கள் வழங்கல்

முல்லைத்தீவு மாவட்ட பாலிநகர பகுதியில் தொழில்சார் பயிற்சி பெற்றவர்களுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான தொழில்சார் பயிற்சி இடம்பெற்றது. உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிராமியப் பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தால், கடந்த ஆறுமாதகாலப் பயிற்சி நடத்தப்பட்டு, பயிற்சி பெற்றவர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் சிறப்புற நடைபெற்ற ஒளிவிழா!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் ஒளிவிழா நிகழ்வு - கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக வட்டக்கச்சி பங்குதந்தை அகஸ்ரின் அடிகளார் கலந்து கொணடார்.

இந்த நிகழ்வின் மங்கள விளக்கை பிரதம விருந்தினரான அருட்தந்தை அகஸ்ரின் அடிகளார், அருட்சகோதரன் வின்சன் ஆகியோர் ஏற்றினர். விழாச் சுடரை போதகர் ஜோன்மணி ஏற்றிவைக்க, ஆசியுரையை போதகர் ஜோதவா நிகழ்த்த, வரவேற்புரையை போ. மீரா அம்சியா நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் தலைமை உரையை மன்றப் போசகர் பி. டிசானா, சமய ஆசிரியர் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரைகளை வட்டக்கச்சி மகாவித்தியாலய அதிபர் சி.சந்திரராசா, போதகர் ஜோன்மணி ஆகியோர் நிகழ்த்தினர். பிரதம விருந்தினர் உரையை வட்டக்கச்சி பங்குத் தந்தை அகஸ்ரின் அடிகளார் நிகழ்த்தினார்.

நிகழ்வில் அபிநயப்பாடல், நடன, நாட்டிய சங்கமம், வில்லுப்பாட்டு, கிறிஸ்மஸ் விருந்து என்னும் நாடகமும் இடம்பெற்றன.

யாழ்.மறை மாவட்ட 2004 வருடாந்த மறைக்கல்வி வினாவிடைப் போட்டியிலும், கிறிஸ்தவ மன்றத்தினரால் கிறிஸ்து பிறப்பை ஒட்டி நடாத்தப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டி, வினாவிடைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்தப் போட்டிகளுக்கான பரிசில்களை பங்குத்தந்தை வணபிதா அகஸ்ரின் அடிகளார், போதகர் ஜோன்மணி ஆகியோர் வழங்கி கௌரவித்தனர். (09)




## கருத்தரங்கு

(கிளிநொச்சி)

அடுத்தவருடம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர விஞ்ஞானப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான இரசாயனவியல் பாடத்துக்கான கருத்தரங்கு நேற்று காலை 8.30 மணிக்கு நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆசிரியர் குழுவினரால் நடத்தப்பட்டது.

# பொன்நகர் கிராமத்திலுள்ள மக்கள் அடிப்படை வசதியை பெறுவதில் சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பொன்நகர் கிராமத்தில் 103 குடும்பங்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இந்தக் கிராமத்தில், 103 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், இந்துப் பகுதி மக்களுக்கான போக்குவரத்து, மருத்துவ வசதியின்மை, கல்வி வசதியின்மை போன்ற அடிப்படை வசதிகளின்றி மிக நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் போக்குவரத்துக்கான பிரதான வீதிகள் உட்பட சிறுவீதிகள் வரை இது வரையில் புனரமைப்புச் செய்யப்படாமை போன்ற காரணங்களால், இந்தப் பகுதி மக்கள் தமது அடிப்படை வசதிகளைப் பெற்று கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

# வட்டக்கச்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் 200 வீடுகள் சேதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்த கடும்மழை காரணமாக, வட்டக்கச்சிப் பகுதியில் 200 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

இரணைமடு நீர்த் தேக்கத்தின் நீர் அதிகரித்தமையால், அதன் வான்கதவுகள் திறந்து விடப்பட்டன. மாயவனூர் புளுதியால் நீர்த் தேக்கம் வான் பாய்ந்ததால், சிவிக் சென்ரர் பகுதியில் 10 வீடுகள் முற்றாகச் சேதமடைந்ததுடன், மாயவனூரில் 63 வீடுகளும், பெரியகுளம் பகுதியில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகளும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. இந்த வீடுகளில் குடியிருந்த மக்கள் - உறவினர் வீடுகளிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

# முல்லைத்தீவு தபாலகத்துக்கு வரும் தபால்கள் காலதாமதமாகவே விநியோகிக்கப்படுகின்றன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தபாலகத்துக்கு வரும் தபால்கள் - ஒரு நாள் தாமதமாகவே உபதபாலகங்களுக்கு அனுப்பப்படுவதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு உபதபாலகங்களுக்கு அனுப்பப்படும் தபால்களும், ஒரு நாள் தாமதமாகவே மக்களுக்கு விநியோகிக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு முல்லைத்தீவு மாவட்ட தபாலதிபரைக் கேட்டபோது, தபால்கள் விநியோகிக்கப்படும் வாகனம் பழுதடைந்திருப்பதன் காரணத்தால், இவ்வாறு தபால்கள் தாமதமாக விநியோகிக்கப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அதிகாரிகளுக்கு தபால் அதிபரால், அறிவிக்கப்பட்டும், இதுவரையில் அவர்களால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பரந்தனில் கொட்டப்படும் கழிவுகளால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

(கிளிநொச்சி)

பரந்தன் பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புப் பகுதியை அண்டிய பகுதிகளில், கழிவுப் பொருட்களைக் கொட்டுவதால், அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை அண்டிய பகுதியிலிருந்து, கிளிநொச்சி நகரப் பகுதி வரை சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களை இந்தப் பகுதியில் கொண்டுவந்து கொட்டுவதால், துர்நாற்றம் வீசுவதுடன், தொற்றுநோய்கள் பரவும் ஒரு அபாயநிலையும் காணப்படுகிறது.

கிளிநொச்சி அரச அதிபரால் தெரிவுசெய்யப்பட்ட, மக்கள் நடமாட்டமற்ற இடங்களில் இந்தக் கழிவுப் பொருட்களை கொட்டாமல், மக்கள் நடமாடும் பகுதியில் கொட்டப்படுவதையிட்டுச் சம்மந்தப்பட்டவர்கள் கவன மெடுக்கவேண்டும் என இந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பாரதிபுரத்தில் புதிய வீடுகளுக்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் புதிய வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வு - கடந்த வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 148 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கற்கள் நாட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் பொதுசுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, முதலாவது வீட்டுக்கான அடிக்கல்லை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த வின்சன், பாரதிபுர கிராம அலுவலர் ஆகியோர் நாட்டி வைத்தனர். தொடர்ந்து ஏனைய வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

# வட்டக்கச்சி – இராமநாதபுரம் பகுதிகளில் பஸ் தரிப்பிடமின்றி மக்கள் பெரும் சிரமம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பிரதேசங்களில் பல இடங்களில் பஸ்தரிப்பிடமின்றி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேச மக்கள் நீண்டகாலமாக மரநிழலிலேயே பஸ்ஸுக்கு காத்து நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

மழை காலத்தில் பொதுமக்கள் மழையில் நனைந்தவாறே பஸ்ஸுக்காக் காத்துநிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் உரிய இடங்களில் பஸ் தரிப்பிடங்களை நிறுவுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

## எயிட்ஸ் பற்றிய கருத்தரங்கு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கான எயிட்ஸ் பற்றிய கருத்தரங்கு - கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பணிமனையில், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கு கடந்த புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது. இதில் 5 வைத்திய அதிகாரிகளும், 25 இற்கும் மேற்பட்ட சிற்றூழியர்களும் கலந்து கொண்டனர். (இ)

## வினாத்தாள்கள் திருத்தும் பணி ஆரம்பம்

கடந்த மாதம் நடைபெற்ற தரம் 6,7;8 மாணவர்களுக்கான தமிழீழ வரலாற்றுப் பரீட்சையின் வினாத்தாள்கள் திருத்தும் பணி நேற்று ஆரம்பமாகி, இன்றும் கிளிநொச்சி கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கரைச்சி கோட்டத்துக்கான வினாத்தாள்கள் வலயக் கல்வி அலுவலகக் கல்வி வள நிலையத்திலும், கண்டாவளைக் கோட்டத்துக்கான வினாத்தாள்கள் தருமபுரம் மகாவித்தியாலயத்திலும், பூநகரி கோட்டத்துக்கான வினாத்தாள்கள் பூநகரி மகாவித்தியாலயத்திலும், பளை கோட்டத்துக்கான வினாத்தாள்கள் பளை மத்திய கல்லூரியிலும் வைத்து மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. (இ)







வவுனியா மாவட்டத்தில் திறமையாகக் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்கு, கனடா மொன்றியலிலுள்ள அமுதகலசம் அறநெறிக் கழகத்தால் கல்வியைத் தொடருவதற்கான நிதியை, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மாணவி ஒருவருக்கு கையளிப்பதை முதலாவது படத்திலும், இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வவுனியா மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் சுபாஸ், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மற்றும் பிரமுகர்களை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம். படம்: கனகரவி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று*
*போற்றினும் பொத்துப் படும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## உலகமயமாதலின் அங்கமாகிவரும் மனிதஉரிமை மீறல் நடவடிக்கைகள்

இது மனித உரிமைகள் வாரம்.

கடந்த வெள்ளியன்று ஆரம்பித்த இந்த வாரம் மனித உரிமைகள் தொடர்பாக உலகம் பாரிய அளவில் பேசும் வாரமாகியுள்ளது.

உலகின் எல்லாநாடுகளிலும் இன-மத-மொழி- நிறம் மற்றும் வல்லாதிக்க சிந்தனை ஆகியனவற்றின்பேரில் அடக்கி ஒடுக்கப்பட்டு, மனிதர்களுக்கான அடிப்படை வாழ்வியல் உரிமைகள் - அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்ட மக்கள் அறிவியல் வளர்ச்சியில் சிகரங்களை எட்டமுனையும் இந்த புதிய மிலேனிய யுகத்திலும் இருக்கிறார்கள் என்பது அவமானகரமான விடயமேயாகும்.

அதனைவிடவும் கலை, கலாசாரம், பண்பாடு பற்றி பெரிதாகப் பீற்றிக்கொள்ளும் - மனித நாகரிகத்தில் மேலோங்கிய நிலையில் - அறிவுசார் விஞ்ஞான வளர்ச்சியில் உன்னதங்களை எட்டியுள்ளதாக பெருமை பேசிக்கொள்ளும் அமெரிக்கா முதல் இந்தியா வரையிலான வல்லாதிக்க சிந்தனையுடன் இயங்கும் சகல நாடுகளும் மனிதஉரிமைகளை எந்த அளவுக்கு தத்தம் சுயநலத்தின் அடிப்படையில் மதிக்கின்றன என்பதும் வெட்கப்படவேண்டிய விடயமேயாகும்.

இன்று மனித உரிமைகள் குறித்து பெரிய அளவில் அக்கறை கொள்வதாக தம்மை பெருமளவில் பிரசாரப்படுத்தத் தீவிரம் காட்டும் சகலவல்லாதிக்க சக்திகளும், தத்தம் சொந்த நாட்டிலும் தமது ஆதிக்க எல்லைக்குள் சிக்கக்கூடிய சகல சிறிய வலுவற்ற நாடுகளிலும் சிலவேளைகளில் வெளிப்படையாகவும், பெரும்பாலான சமயங்களில் மறைமுகமாகவும் தமது அரசியல், இராணுவ, பொருளாதார நலன்களுக்கேற்ப எத்தகைய குரூர சிந்தனைகளுடன் கூடிய மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறார்கள் என்பதை விபரித்துக்கூறவேண்டிய அவசியமே கிடையாது.

ஒவ்வொரு மேலாதிக்க சக்தியும் - அல்லது நாடும், தத்தம் தேசிய நலன்களின் அடிப்படையிலேயே சுயநல அரசியல் மற்றும் ராணுவ அபிலாஷைகளை ஒட்டியே மனித உரிமைகள் தொடர்பான அளவுகோல்களை திட்டமிட்டு உருவாக்கியுள்ளது என்ற கசப்பான உண்மையை அவர்கள் ஏற்றுக்கொள்ளாது நிராகரித்து வந்திருக்கிறார்கள் என்பதை - மனிதம் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வோர் பகிரங்கப்படுத்த அஞ்சினாலும், உண்மை உண்மைதான் அதனை உலகின் மனச்சாட்சி அறியவே செய்யும்.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் அதன் சார்பு நாடுகளின் - ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் மத்தியகிழக்கு நாடுகள் மீதான மேலாதிக்கவாதம், இந்தியாவின் இந்துத்துவ மதவாதம், இலங்கையின் பேரினவாதம், ரஷ்யாவின் அயல்நாடுகள் மீதான ஆக்கிரமிப்புவாதம் மற்றும் ஏனைய பல்வேறு நாடுகளின் அடக்குமுறை மற்றும் ஆதிக்க வாதங்கள் அனைத்தும் எத்தகைய மனித உரிமைமீறல்களை இன்றைய காலகட்டத்தில் அன்றாடம் அரங்கேற்றி வருகின்றன என்பதை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது.

ஆனால், மனிதத்தை புறக்கணித்து மனிதன் மனிதராக வாழும் உரிமைகளை ஆயுதமுனையில், ராஜதந்திர ரீதியில், பொருளாதாரத்தடை போன்ற நகர்வுகளில் பரந்த அளவில் நிராகரித்து ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளும் மேற்குறித்த வல்லாதிக்க சக்திகள், மனித உரிமைகளுக்கான காவலர்கள் என தம்மை இந்த மனித உரிமைகள் தினத்தில் ஓங்கி பிரகடனம் செய்யும் வகையில் அறிக்கைகளை வெளியிடுவது தான் சர்வதேச கோமாளித்தனமாகவும் உள்ளது.

ஆயுதங்களை பெருமளவில் உற்பத்திசெய்து, சர்வதேசச் சந்தைகளில் யுத்தபோதைகொண்ட நாடுகளுக்கு விற்பனை செய்யும் நாடுகளும், அணுசக்தி வலுவைக் கொண்டதாகி உலகின் அமைதிக்கு அழிவை ஏற்படுத்தும் வகையிலான அச்சுறுத்தலுக்கு காரணமாகியுள்ள நாடுகளும், மத, மொழி மற்றும் இனவெறிகொண்டு சக மனிதர்களை அடக்கி ஒடுக்கும் நாடுகளும் மனித உரிமைகள் தினத்தை கொண்டாடும்போது தான் அவமானத்தாலும், வேதனையாலும் தலை குனிகின்றது.

இலங்கையில் 'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற தத்துவத்தைக் கடைப்பிடிக்கும் பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர், சிறுபான்மை தமிழ்மக்களின் அடிப்படை அரசியல் மற்றும் வாழ்வுரிமைகளை எப்படி மதிக்கிறார்கள் என்பதற்கு இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களும் மிதிவெடி கவனம் என எழுதி நாட்டப்பட்டுள்ள நீண்டு பரந்து விரிந்த நிலப்பரப்புகளுமே சான்றாகும்.

இடம்பெயர்ந்தும், புலம் பெயர்ந்தும் ஏதிலியராக அலையும் தமிழ்மக்களின் மனித உரிமைகள் பறிப்பு விடயத்தில் இலங்கை அரசுக்கு பின்பலமாக அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளும் இந்தியா, பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல் போன்ற இரண்டாம் நிலை வல்லாதிக்க சக்திகளும் கணிசமான பங்கை வகித்துள்ளதை எவரும் அறியவே செய்வர்.

ஐ.நா.போன்ற மனித உரிமைகளை - சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச அமைப்புகளும், ஆட்சி அதிகாரத்துடன் கூடிய வல்லாதிக்க நாடுகளின் செயற்பாடுகளை பாரிய அளவில் கண்டித்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தீவிரம் காட்டுவதில்லை என்பதே மனித உரிமை மீறல்கள் மேலும் அதீத வளர்ச்சியடைவதற்கான காரணமாகும்.

இது மனித உரிமை மீறல்களும் உலகமயமாதல் கொள்கையின் ஒரு அங்கமாகிவிட்டதோ என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தவே செய்கிறது.

## நாடும் நடப்பும்




# மூன்றாவது தரப்பின் உதவியுடன் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் !

**பேராசிரியர் காமினி சமரநாயக்க**

(கொழும்பு)

இரண்டாம் உலகப்போருக்குப் பிந்திய சூழ்நிலையில் எந்த ஒரு நாட்டினதும் உள்நாட்டுப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, மூன்றாவது நாட்டின் பங்களிப்பு அவசியமானது என பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

பாதுகாப்பு ஆய்வு மையம், ஜேர்மனின் ஹான்ஸ் சேய்தல் பௌண்டேஸன் ஆகிய நிறுவனங்கள் இணைந்து சென்னையில் நடத்தும் தெற்காசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வும், அமைதி முயற்சியும் என்ற சர்வதேசக் கருத்தரங்கில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஒரு நாட்டுக்குள் மோதிக்கொள்ளும் இருதரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு தாமாக முன்வராவிட்டால், மூன்றாவது நாட்டின் தலையீடு அவசியம்.

சில சமயம் அத்தகைய முயற்சி தோல்வியடைவதும் உண்டு. ஆயினும், இலங்கைப் பிரச்சினையில் நோர்வேயின் முயற்சியால் இதுவரை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இடைக்கால நிர்வாகத் திட்டம் தொடர்பாக அதில் தேக்கநிலை உள்ளது. இடைக்கால தீர்வுத்திட்டம் பேச்சுவார்த்தையின் இறுதிக்கட்டத்தில் இடம்பெறவேண்டும் என, இலங்கை அரசு தனது செயற்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளது. ஆனால் அதுவே பேச்சுவார்த்தையின் தொடக்கமாக அமைய வேண்டும் என்று விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

நோர்வேப் பிரகடனத்தின் அடிப்படையில் உலக நாடுகளின் ஆதரவுடன் பிரச்சினையைத் தீர்ப்பதே அரசுக்கும், புலிகளுக்கும் இருக்கும் ஒரேவழி எனத் தெரிவித்தார்.

இந்த சென்னைக் கருத்தரங்கில் தெற்காசிய நாடுகளின் உள்நாட்டுப்பிரச்சினைகள் என்ற தலைப்பில் உரையாற்றிய ஜவஹர்லால் நேரு, பல்கலைக்கழக பேராசியர் சுகதேவ் முனிவ், தெற்காசிய நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளை மூன்றாக வகைப்படுத்தலாம். காஷ்மீர், நாலாந்து போன்ற வரலாற்று ரீதியிலான பிரச்சினைகள், நேபாளத்தில் இடம்பெறும் மாக்ஸிஸ்ட்டுகளின் கொள்கை ரீதியிலான பிரச்சினைகள், மூன்றாவது தேசிய இனம் அல்லது தனித் தன்மையை நிலைநாட்டும் இலங்கைத் தமிழரின் போராட்டம் என வகைப்படுத்தலாம்.

சமூக பொருளாதாரப் பிரச்சினைகளே அடிப்படையாக அமையும். இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், அவை அரசியல் பிரச்சினைகளாக மாறி, பின் தீவிரமடையும்.

இந்த நிலையில் உலகமயமாதல் சூழ்நிலையில் இத்தகைய பிரச்சினைகளை வெறும் உள்நாட்டுப் பிரச்சினையாகக் கருதிவிடக்கூடாது.

இலங்கைப் பிரச்சினைக்கு அடிப்படையாக அமைந்த கல்வி நிலைமை குறித்து, ஜப்பான் மற்றும் யாழ்ப்பாணம், பல்கலைக்கழகங்களின் முன்னாள் பேராசிரியர் சாந்தசீலன் கதிர்காமரும், அமைதிக்கான பேச்சுவார்த்தை அதன்போக்கு மீண்டும் அமைதி நிலவுவதற்கான வழிவகைகள் குறித்து பத்திரிகையாளர் கே.வெங்கட்ராமன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# சுகாதாரத் திணைக்களத்துக்கான வாகனங்களை வழங்கக் கோரிக்கை !

வடக்கு - கிழக்கு சுகாதாரத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்கள் இதுவரை வழங்கப்படாதது குறித்து, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுனருடன் தொடர்பு கொண்டு சுமூகமான முறையில் தீர்வு காணுமாறு கேட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் சுகாதாரத் திணைக்களத்துக்கு வழங்கப்படவிருந்த 26 வாகனங்களில், 15 வாகனங்களை மட்டும் வழங்கிவிட்டு, ஏனையவற்றை வேறு திணைக்களங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து தான் உடனடியாக ஆளுநரின் பிரதம செயலாளருடன் தொடர்பு கொண்டதையடுத்து- வாகன வழங்கல் குறித்து தாமே தீர்மானிப்பதாக தெரிவித்ததைத் தொடர்ந்து-

ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது தொடர்பாக உரிய தீர்வை எடுப்பதாகக் கூறியதாகவும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

# சமூக அபிவிருத்திக்கான இருநாள் பயிற்சிப்பட்டறை

சமூக அபிவிருத்திக்கான இருநாள் பயிற்சிப் பட்டறை நாளையும், நாளை மறுதினமும் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 8 மணிமுதல் 5 மணிவரை இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சமூகசேவை நிறுவனமும், வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவப் பயிற்சி நிறுவனமும் யாழ்.செயலகத்துடன் இணைந்து நடத்தும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் யாழ்.மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், சங்கானை, உடுவில் பிரதேச செயலாளர்களான ச.எ.மோகன்றாஸ், எஸ்.திருவாகரன், சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரக் குமார், சமூகசேவை அதிகாரிகள், சுகாதார திட்டமிடல் பணிப்பாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சமூக அபிவிருத்தியை கிராமங்களூடாக மேற்கொள்வதற்காகக் குடும்பநலன் பேணல், நோய்த்தடுப்பு, போஷாக்கு நிலைமையை உயர்த்தல் தொடர்பான பிரச்சினைகளும் அதைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் தொடர்பான ஆலோசனைகளும், கருத்துரைகளுமே இருநாள் பயிற்சிப் பட்டமைறயில் இடம்பெறவுள்ளதாக யாழ்.மாவட்ட அபிவிருத்தி சமூக்சேவை நிறுவன இணைப்பாளர் ப.குணராஜா தெரிவித்தார். (91)

# 11 மாதங்களில் பெண்களுக்கெதிரான 165 வன்முறைகள் இடம்பெற்றுள்ளன

இந்த ஆண்டில் - 11 மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்களுக்கெதிரான 165 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது.

பெண்களுக்கு எதிரான 121 வீட்டு வன்முறைகளும், சிறுமிகளுக்கெதிரான 10 துன்புறுத்தல்களும் இடம்பெற்றுள்ள அதேவேளை, சிறுமிகளுக்கெதிரான 10 பாலியல் வன்புணர்ச்சிகளும், 2 பாலியல் துன்புறுத்தல்களும் இடம்பெற்றுள்ளன.

இதில் சிறுமிகள் கர்ப்பிணியாக்கப்பட்டுக் கைவிடப்பட்ட 2 சம்பவங்களும், பெண்கள் கர்ப்பிணியாக்கப்பட்டுக் கைவிடப்பட்ட பல சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை இந்தக் காலப்பகுதியில் ஒரு சிறுமியும், 3 பெண்களும் கொல்லப்பட்ட சம்பவங்களுடன் மொத்தமாக 165 வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரணி

# அரசியல் ச(க்)திக்குள் சிக்கியுள்ள சங்கரமடம்



இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிந்தனைச் சிற்பியைச் சீனாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தது சீனத்தூதரகம். சிந்தனைச் சிற்பிக்கு விமானத்தில் பல மணி நேரம் பயணிக்கமுடியாத காரணத்தாலும், வேறு காரணங்களாலும் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. நல்ல சந்தர்ப்பம் தானே, சீனாவுக்குப்போய் வந்திருக்கலாமே என்று அவரிடம் சிலர் கூறினர். அப்பொழுது சீனாவுக்குச் சென்று திரும்பிய ஓர் ஆசிரியைப் பற்றிச் சொல்லி, அவர் ஒரு மனநோயாளியாக இங்கே திரிவதைப் பாருங்கள். நோய் என்று கூறி மருத்துவம், என்று கூறி உளவியல் தாக்கத்தால் அவர் இங்கு திரிவது போல், என்னையும் இருக்கச் சொல்கிறீர்களா என்று கேட்டார். எனக்கு நோய் இல்லை. மருத்துவம் தேவையில்லை என்று சொல்லலாம் தானே, என்று மற்றவர்கள் கூறினார்கள். அதற்கு அவர் கூறிய பதில்தான் இன்றைக்கு மிகவும் பொருந்துவதாக உள்ளது.

சிந்தனைச் சிற்பி தத்துவம் கற்றவர். ஆழ்ந்த சமயப்பற்றுக் கொண்டவர். அவர் சங்கராச்சாரியாரைக்காண சங்கர மடத்துக்குச் சென்றவர். அப்படி அங்கே சங்கராச்சாரியாரைக் காணச்செல்பவர்கள் அவரைத் தரிசித்து விட்டு, முதுகுகாட்டித் திரும்பிவர முடியாது. போனவர்கள் பின் முதுகு காட்டாமல் பின்பக்கமாகவே நடந்து வாசல்வரை வரவேண்டும்.

அங்கே நிற்பவர்கள் இதையெல்லாம் கவனிக்கவென்றே நியமிக்கப்பட்டுள்ளனர். தப்பித்தவறித் திரும்பினால் விளைவு என்னவாகும் என்று சொல்லில் கூறமுடியாது. இதைக் கூறிவிட்டு எமது உயர் சமயபீடத்துக்குள்ளேயே நிலைமை இவ்வாறு மோசமாக இருக்கும்பொழுது, ஒரு கம்யூனிச நாடான சீனாவுக்குச் சென்றுவிட்டு, எப்படி எமது விருப்பப்படி திரும்பிவர முடியும். அதனால்தான் சீனாவுக்குச் செல்லவில்லை என்றார்.

அவர் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாறு கூறியிருந்தமையை இன்று சங்கரமடத்தைப் பற்றி வெளிவரும் செய்திகள் உறுதிப்படுத்திக்கொண்டிருக்கின்றன என்பது உண்மையே.

அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் பகுத்தறிவுக்கொள்கையைப் பரப்பிய பொழுது - மடாலயங்களையும், மடாதிபதிகளையும் பற்றிக்கூறிய கருத்துக்கள் எவ்வளவு தூரம் மக்களிடையே சென்றடைந்தன என்பது கேள்விக்குறியே? நாத்தீகர்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்று அவர்கள்மீது குற்றம் சுமத்தினார்கள். மடாலயங்களில் நடந்துகொண்டிருந்த அருவருக்கதக்க செயல்களை, அதுவும் கடவுளின் பெயரால் செய்கின்றார்களே என்று பட்டியலிட்ட பொழுது ஏற்றுக்கொண்டவர்கள் மிகச் சிறிய தொகையினரே.

பார்பனியம் கடவுளின் பெயரால் சொல்வதெல்லாம், செய்வதெல்லாம் நியாயமானவை எனச் சிந்திக்காது ஏற்றுக்கொண்டனர் மக்கள். பகுத்தறிவுக் கருத்துக்களை தெய்வ நிந்தனை என்று கூறியதை ஏற்றுக்கொண்டனர் மக்கள். அந்தக்காலத்தில் யாழ்ப்பாண மண்ணிலேயே தமிழகத்தைப் போல் பார்ப்பனியம் ஆதிக்கம் செலுத்தவில்லை. ஆனால், இன்று அதன் ஆதிக்கம் வளர்ந்துவிட்டது, மேலும் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது யதார்த்தமாகும்.

இன்று சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் மீது கொலைக்குற்றச்சாட்டு, கொலை முயற்சிக் குற்றச்சாட்டு, பாலியல் தொடர்பான சந்தேகங்கள், ஊழல், நிதிமோசடி, என்று பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்னர் இறந்தவர்கள் கூடக் கொலையுண்டிருக்கலாம் என்று புதிய குற்றச்சாட்டுக்கள் அடுக்கிக் கொண்டுபோகின்றது நிலைமை.

ஏன் இத்தனை ஆண்டுகள் இவைபற்றி காவல்துறையினர் கண்டுகொள்ளவில்லை? திறமையின்மையா? வெளி அழுத்தங்களா? அல்லது தற்பொழுது ஏதாவது காழ்ப்புணர்ச்சி காரணமாகப் பழையதைப் புதுப்பிக்கிறார்களா? என்பவை மக்கள் மனதில் எழும் சந்தேகங்களாகும். இவைபற்றிய வெளிச்சம் எப்படியும் விரைவில் வெளிவரவே செய்யும்.

மலையகத்தில் மாத்தளையில் ரவி என்ற பெயருடன் பிறந்துவளர்ந்த ஒருவர் ரவிச்சாமியார் என்றிருந்து, சுவாமி பிரேமானந்தாவாகினார். இவர் யாழ்ப்பாணம் வந்து, தான் சாயி பாபாவின் வாரிசு என்று கூறி வந்தார். சுன்னாகத்தில் மடாலயமும் வைத்து நடத்தி வந்தார். 1983 வன்செயல் இவரை இந்தியாவுக்குச் செல்லவைத்தது. அங்கே பெரிய புள்ளிகள் இவரிடம் வந்து அருள்பெற்றனர்.

சிவராத்திரியில் 'லிங்கம்' கக்கிக் கொடுப்பாராம். இவ்வாறு இவர் பெரும் செல்வம் சேர்த்ததும், அதன்பின்பு இவரது ஆச்சிரமத்தில் நடந்த கொலைகள், பாலியல் வல்லுறவுகள் அம்பலத்துக்கு வரவே, கைதாகிச் சிறை சென்று இன்றுவரை சிறையில் இருப்பதும் அனைவரும் அறிந்ததே. இவருக்காக வாதாடியவர் இந்தியாவின் சிறந்த வழக்கறிஞர்களில் ஒருவராக ராம் ஜெத்மலானி என்பவர். இவருக்கு எவ்வளவு காசு கொடுபட்டிருக்கும் என்பதிலிருந்து பிரேமானந்தாவின் செல்வச் செழுமை விளங்குமல்லவா.

பிரேமானந்தா அகப்பட்டுக் கொண்டதும் அங்கே என்ன எழுதினார்கள்? இலங்கையைச் சேர்ந்த போலிச்சாமியார் என்றார்கள். இத்துடன் நின்றிருந்தால் கூடப் பொறுத்துக் கொள்ளலாம். அவரைப் புலிச்சாமியார் புலிகளுக்காக இங்கு வந்திருக்கிறார் என்று பெரியளவில் எழுதினார்கள். சாமிமார்களையும், புலிகளையும் முடிச்சுப்போட்டு தமிழ் மக்களின் தூய்மையான விடுதலை இயக்கத்தைக் கொச்சைப்படுத்தவே பார்ப்பனியம் முயன்றது.

இந்தியாவின் வடக்கிலிருந்து தெற்கு வரை போலிச்சாமியார்களின் கபட வேடங்கள் அம்பலத்துக்குவந்துகொண்டிருக்கின்றன. சமயங்கள் போதிகப் புறப்பட்ட தூய்மையான வாழ்க்கைக்கு எதிராக சமயங்களுக்குள் உள்ள சமய முகமூடி அணிந்த சாமியார்கள் தில்லுமுல்லுகளைச் செய்து வருகின்றனர்.

ஆனால், அரசியல் செல்வாக்குள்ளவர்களின் ஆசிரமங்களின் உள்ளகத் திருவிளையாடல்கள் ஆட்சியாளர்களாலேயே மறைக்கப்பட்டு வருவது அங்கே அரசியலுக்குள் மதம் எந்தளவு தூரம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு ஆதாரங்களாக அமைந்துள்ளன.

பெரியவர் ஆதி சங்கரரால் தோற்றுவித்து வளர்க்கப்பட்ட காஞ்சிமடத்தில் இன்று இத்தனை பெரிய குற்றச்சாட்டுக்கள் எழக் காரணம் என்ன? சங்கரநாராயணன் கொலை, இராதாகிருஷ்ணன் கொலை முயற்சி என்று பல்வேறு வகையான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

சிலவற்றைப் பெரிதாக்கும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமா? என்று சிலர் சந்தேகம் எழுப்புகின்றனர். இதுவரை ஒட்டி உறவாடிய தமிழக முதல்வர் இவ்வாறு நடவடிக்கை எடுக்க முற்பட்டது ஏன்? என்று கேள்வி எழுந்துள்ளது. கொலை செய்யப்பட்ட சங்கரராமன் குடும்பத்துக்கு ஐந்து லட்சம் ரூபா கொடுக்கப்பட்டதன் உள்நோக்கம் தான் என்ன? எதற்காக அவர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்பட்டது? என்பன பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

இது ஒருபுறம் இருக்க கொலைக்குற்றஞ்சாட்டப்பட்டவரை வெளியே விடுமாறு ஓய்வு பெற்ற குடியரசுத் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் - முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் உட்பட பலர் பாரதீய ஜனதா கட்சி, விஷ்வ இந்து அமைப்புக்கள், சிவசேனை, சங் பரிவார் போன்றவை உண்ணாவிரதம் இருந்தன. இந்திய நாட்டின் பார்ப்பனிய இந்துத்துவ ஆழம் எத்தகையது என்பதைச் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றது என்றே கணிக்கத் தோன்றுகிறது.

ஜெயேந்திரர் குற்றஞ்செய்தாரா அல்லது செய்யவில்லையா என்பதை நீதித்துறை தீர்மானிக்கும். ஆனால், அதற்கு முன்னதாக ஊர்வலங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்களை அரசியல்வாதிகள் நடத்தி நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறார்கள். வேறு சமயத் தலைவர்கள் இதேபோல் கைதுசெய்யப்படும்போது, கண்காணாமல் இருக்கும் இவ்வகை அரசியல்வாதிகள், சங்கரமடத்து ஜெயேந்திரர் என்றதும் பொங்கி எழுவது ஏன்? இந்துத்துவத்தின் அடையாளம் காஞ்சிமடம் என்பது தான் அக்கறையா? அயோத்திப் பிரச்சினையில் தலையிட்டு ஆளும் பாரதீய ஜனதாவிடம் அப்பொழுது நல்லபெயரெடுத்தவர். அன்று தமிழக முதல்வரின் பா.ஜ.க கூட்டுக்கு உதவியவர் என்பதால்தான் கைதுசெய்யப்படக்கூடாது என்பது காரணமாக இருக்கலாமா?

இராமானுஜரும், விவேகானந்தரும், ஆதி சங்கரரும் கட்டிவளர்த்த பண்பு அடியோடு அழிந்துபோய்விட்டதோ என்று எண்ணத் தோன்றும் வகையில் நடப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

முனனணி எழுத்தாளர் அனுராதா ரமணன் தான் 13 ஆண்டுகளுக்கு முன்னர் ஜெஜேந்திரர் மீது குற்றஞ்சாட்டியதாகவும், அப்பொழுது எவருமே, தான் கூறியதைக் கவனத்தில் எடுக்கவில்லை என்று கூறியுள்ளார். அப்பொழுது தனக்கு நேர்ந்ததைப்பற்றிக் கவனத்தில் எடுத்திருந்தால் சங்கரராமனுக்கு இந்தக்கதி நேர்ந்திராதவாறு தடுத்திருக்கலாம் என்பது அவரது கருத்து.

எது எவ்வாறாயிருந்தாலும் அரசியல் ஆதாயத்துக்காக மதத்தைப் பாவிப்பது இந்தியா - இலங்கை போன்ற நாடுகளில் பெருகிவரும் கலாசாரமாக உள்ளது. பார்ப்பனிய இந்துத்துவத்தின் அடித்தளத்தில் ஆட்சியமைக்க இந்தியாவில் நடைபெறும் நிகழ்வுகள் இருக்கின்றன.

இலங்கைத் தீவில் சிங்கள பௌத்தம் என்ற பெயரில் எப்பொழுதோ தொடங்கிவிட்ட அரசியல், அங்கு சங்கரராமன் என்பவரின் கொலை அரசியல் பரபரப்புக்குள்ளாகி இருக்கிறது. இங்கேயோ இலங்கைப் பிரதமரே புத்தபிக்குவின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையான பரிதாபம், அங்கே அதற்கு முன்னரே மகாத்மாகாந்தி மதவெறிக்குப் பலியானார். எப்படிப் பார்த்தாலும் மதவெறி - இந்தவகை நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதைக் காணக்கூடியதாகிறது.

தனிமனித வாழ்க்கையிலும் ஆதிக்கம் செலுத்தும் சாமியார்கள், அரசியலிலும் ஆதிக்கம் செலுத்தும் நிலைதான் இந்த இரு நாடுகளிலும் மேலோங்கி இருக்கிறது. ஜெயலலிதாவின் வெற்றிக்குப் பாடுபட்டவர் ஜெயேந்திரர். பாரதீய ஜனதா அவரால் அயோத்தியில் இராமர் கோயில் கட்டிவிடலாம் என்று நினைத்தது. ஆனால் தேர்தலில் இந்த இரு பகுதியினரும் தோற்றுப்போயினர். இப்பொழுது ஜெயலலிதா, சங்கராச்சாரியார் விவகாரத்தில் தீவிரமாக இருப்பது ஏன் என்பது பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. முன்னைய சங்கராச்சாரியார்கள் தீவிர அரசியலுக்குள் இறங்காமல் இருந்ததுபோல் இவரும் இருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்று சிலர் கூறுகிறார்கள்.

ஆனால் மடங்களுக்குள் நடக்கும் லீலைகளை அம்பலமாக்குவதுபோல் இன்று பல விபரங்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இவற்றில் முழுவதும் பொய்யாக இருக்க முடியாது என்பதுதான் யதார்த்தமாகும். வெகுவரைவில் பல உண்மைகள், சதிகள் அம்பலத்துக்கு வரத்தான் செய்யும். அப்பொழுது மக்கள் விழித்துக்கொள்ளட்டும்.

## தகவல் தொழில்நுட்பம்...

**த.தவரூபன்**

**சிங்கப்பூரில் நடைபெறும் ஏழாவது உலகத் தமிழர் தகவல் தொழில்நுட்ப மாநாட்டில் 'வெப். தமிழ்ன்' ஆசிரியர் தவரூபன் சமர்ப்பிக்கும் கட்டுரை**

*(நேற்றைய தொடர்ச்சி)*

போராட்ட நடவடிக்கைகளால் தமது தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் பலரது முயற்சிகள் இன்று ஈழத்தில் மின்னரசு ஒன்றுக்கான ஏதுநிலைக்கு வித்திட்டிருக்கின்றது என்பதையும் இவ்விடத்தில் நாம் மறந்துவிடமுடியாது. மின்னரசு ஒன்று அமைவது எவ்வளவு அவசியமோ அந்த அளவுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாடும், பரவலாக்கமும் அவசியமானதாகும்.

வெறுமனே மின்னரசு ஒன்றை நிறுவி அழகுபார்த்துக்கொண்டிருக்கமுடியாது. மின்னரசு ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அதே வேளையில், ஒரு மின் சமூகத்தினையும் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும். அந்த மின் சமூகத்தினைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஈழம் வீறுநடை பயின்றுகொண்டிருக்கின்றது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மின்சமூகம் கட்டியெழுப்பப்படும்போது அங்கு முக்கியமானது நாட்டுப் பிரஜைகள் தகவல் தொழில்நுட்பத்துக்கு இசைவாக்கம் கொள்ளவேண்டியமையாகும். அப்படியாயின் அவர்கள் நிச்சயம் கணினியைப்பற்றி அடிப்படை அறிவையேனும் பெற்றிருக்கவேண்டியது அவசியமாகும். ஈழத்தில் இது எய்தப்பட்டுவிட்டதா? முற்றுமுழுதாக எய்தப்படாவிட்டாலும், பகுதியளவிலேனும் எய்தப்பட்டுவிட்டது என்பதே இதற்கான பதிலாகும்.

ஒருவரின் கணினிப் பயன்பாடு என்பது- எழுததுரு, விசைப்பலகை ஆகியவற்றில் முக்கியமாகத் தங்கியிருக்கிறது. ஈழத்தைப் பொறுத்தவரையில் பொதுவாக தமிழர்களிடையில் ஈழத்தமிழர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட 'பாமினி' எழுத்துரு பெரும் செல்வாக்குச் செலுத்திக்கொண்டிருக்கிறது. அவ்வாறே பாமினி விசைப்பலகை ஒழுங்குபடுத்தலே விசைப்பலகைப் பயன்பாட்டில் முன்னணி வகிக்கின்றது.

இவை ஒரு சிறந்த மின்னரசு அமைவதில் தாமதத்தை ஏற்படுத்துகிறது என்றால் மிகையாகாது. மின்னரசில் பயன்படுத்தும்போதிலென்ன, மின் சமூகத்தினைக் கட்டியெழுப்பும் போதிலென்ன முக்கிய பாத்திரம் வகிக்கின்ற மேற்படி எழுத்துருவினை இன்று உலகளாவிய ரீதியில் பயன்பாட்டுக்கு உட்படுத்தப் பட்டுவரும் யுனிகோட் எழுத்துருவில் மாற்றியமைத்துக்கொள்ளவேண்டிய தேவை இருக்கின்றது.

காரணம் இப்போதே புதிய தொழில்நுட்பத்தை உள்வாங்கியதான மின்னரசு நிறுவுவது எதிர்காலத்தில் பல சிக்கல்களைத் தவிர்க்க உதவும் என்பதாகும். மேலும் இவ்வாறு யுனிகோட் எழுத்துருக்களின் பயன்பாடு மின்னரசின் பயனாளர் இயலுமையினை உறுதிசெய்வதோடு, செலவையும் குறைக்கும்.

இவ்வாறே விசைப்பலகையினை எடுத்துக்கொண்டாலும், அது தமிழ் என்றால் என்ன, சிங்களம் என்றால் என்ன, ஆங்கிலம் என்றால் என்ன. உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரப்படுத்தலுக்கு ஏற்புடையதும், ஈழத்தில் அங்கீகரிக்கப்பட்டதுமான விசைப்பலகை அமைப்பு பயன்படுத்துவது உறுதியான மின்னரசுக்கு வித்திடும்.

இந்தவகையில் மின்னரசுக்கும், எழுத்துரு மற்றும் விசைப்பலகை போன்றவற்றுக்கும் ஏன் முடிச்சுப்போடுகின்றீர்கள்? இருக்கவே இருக்கிறது ஆங்கிலம். இதற்கு ஏன் குத்தி முறிகிறீர்கள். இது சிலருடைய வாதம். இதனை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியாது. இன்று உலகில் ஆங்கிலத்தில்தான் அநேக இணைய வழிச்செயற்பாடுகள் இருக்கின்றன. இது இணையத்தைப் பொறுத்தவரையில் பிரச்சினையில்லை. மின்னரசாங்கத்தில் ஆங்கிலம் பயன்படுத்தப்படுவதால் கூடியவிரைவில் பரவலாக்கம் செய்வது சாத்தியமாயினும், அது குறித்த ஒரு மக்கள் சமூகத்தினருக்கு மட்டுமே பயன்படும். அந்த வகைக்குள் நாம் இருந்து நோக்கும்போது - இந்தத் தமிழ், சிங்களம் முதலியவற்றின் பிரயோகம் அவசியமற்றதாகவும், வீணான முயற்சிகளாகவும் தோன்றக்கூடும்.

இங்குதான் நாம் ஒன்றைச் சிந்திக்க மறந்து விடுகின்றோம். அடிப்படைக் கணினி அறிவு கூடப் பெற்றுக்கொள்ளாதிருக்கின்ற அல்லது அதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்ட மக்கள், சமூகததுக்கு என்ன தீர்வு. அவர்களுக்கு இவையெல்லாம் சுத்த சூனியம் போலத்தான் இருக்கும். அப்படியாயின் அவர்கள் நாட்டின் பிரஜைகள் இல்லையா? அவர்கள் மின்னரசாங்கத்தின் குடிமக்களாகத் தம்மை மாற்றிக்கொள்ள முடியாதா? இதை உணராதவர்களும் எமது மொழிகள் மின்னரசில் அங்கம்பெறுவ்தை அலட்சியம் செய்பவர்களும் ஈழத்தில் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

மின்னரசாங்கம் வெறுமனே கணினிப் பயிற்சி பெற்றவர்களுக்கும் - உயர், மத்தியதர வர்க்க மக்களும் மட்டுமல்ல என்பதை இலங்கை அரசாங்கமும், இங்குள்ள நிறுவனங்களும் தமது செயற்பாடுகளின்மூலம் உணர்த்திவருவது நிச்சயமாகப் பாராட்ட வேண்டிய விடயமாகும்.

ஈழத்தைப் பொறுத்தவரையில் மின்னரசுக்கான முன்னெடுப்புக்கள் ஒவ்வொரு கிராமத்துக்கும் பரவலாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமையும், ஒவ்வொரு ஈழப்பிரஜையும் மின்னரசில் உறுப்பினராவதற்கான அத்திவாரம் இடப்படுவதையும், அதில் எவ்வாறான மாற்றங்கள் செய்யவேண்டும் எனத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விளைகின்றேன்.

2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தகவல் தொலைத்தொடர்புச் சட்டத்தின்கீழ்- இலங்கை அரசாங்கத்தினதும், உலகவங்கியினதும் நிதியுதவியுடன், இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிலையம் (ICTA) ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் நாட்டின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் சம்பந்தமான தரப்படுத்தல்கள், கொள்கைகள் வகுக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவர்களால் முன்னோடித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டத்தில் e- தலைமைத்துவமும், கொள்கையாக்கமும் என்ற இலக்கின்கீழ், e- சமூகமும் தொழில்நுட்ப நிர்மாணம், தரக்கட்டுப்பாடு, பாதுகாப்பு, தகவல் தொலைத்தொடர்பு, தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி, தகவல் தொடர்பு தொழில்நுட்ப முதலீடும் தனியார்துறை அபிவிருத்தியும், அரசாங்கத்தின் மீள் முன்னேற்றம், தகவல் உட்கட்டமைப்பு ஆகிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றன.

இவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றி கொள்ளப்பட்ட சில திட்டங்கள் வருமாறு -

கொவிஞான வழிமுறை (GGS):- இது விலைகளின் ஏற்றத் தாழ்வுகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் தகவல் தொடர்பு தொழில்

(தொடரும்)

# தாய்வான் நாடாளுமன்ற தேர்தல் முடிவு சீனாவுடனான உறவைத் தீர்மானிக்கும்!



தாய்வானில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு முடிவடைந்த நிலையில் இந்த வாக்களிப்பின் முடிவுகள் சீனாவுடனான தாய்வானின் உறவுகளை தீர்மானிக்கக் கூடியதாக இருக்குமென செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற குளறுபடியான ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தற்போது 225 நாடாளுமன்ற ஆசனங்களுக்கான தேர்தல் நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி சென்சூய் - பியான் இந்த ஜனாதிபதி தேர்தலில் சிறிதளவு பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றிருந்தார். தற்போது தமது கட்சியே நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றிபெறுமென அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இந்த ஆளும்கட்சி வெற்றி பெறுமாக இருந்தால் அது சீனாவுக்கு அச்சுறுத்தலாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் தற்போதைய தாய்வான் ஜனாதிபதி சென்சூய் - தாய்வான் தனியான ஜனநாயக நாடு எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால் தாய்வான் சீனாவின் ஒரு நிலப் பகுதியெனவும் அது தனியாகப் பிரிந்து செல்லுமாக இருந்தால் அதன் மீது தாக்குதல் நடத்தப்படுமெனவும் சீனா எச்சரிக்கை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆளும் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையை பெறுமாக இருந்தால் ஜனாதிபதி சென்சூய் தாய்வானின் அரசியலமைப்பை மாற்றுவாரெனவும் சீனாவுக்கெதிரான சில நடவடிக்கைகளை மேற்கொள்வாரெனவும் இதிலொன்று அமெரிக்காவுடனான 18 பில்லியன் ஆயுத வர்த்தகத்தை நடத்துவதெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



மேற்குக்கரையிலுள்ள சர்ச்சைக்குரிய நிலப் பகுதியான எட்னாவில் பலஸ்தீன பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவேளை, அவர்களைக் கலைக்க இஸ்ரேல் படைவீரர் ஒருவர் கண்ணீர்ப்புகைக் குண்டை தனது துப்பாக்கியிலிருந்து செலுத்துவதைக் காணலாம்.




# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு; பத்துப் பேர் பலி, 30 பேர் காயம்!

பாகிஸ்தானின் பலோசிஸ்தான் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பத்துப்பேர் கொல்லப்பட்டதுடன், 30 பேர்வரை காயமடைந்ததாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் குண்டுத் தாக்குதல் இராணுவ வாகனமொனறை இலக்குவைத்து நடத்தப்பட்டதாகவும், இதன்போது குறிதவறி குண்டு வெடித்ததில் பொதுமக்களின் உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலை தாமே நடத்தியதாக பலோசிஸ்தான் விடுதலை இராணுவம் என்ற அமைப்பு உரிமை கோரியுள்ளது. தமது இலக்கு இராணுவ வாகனமெனவும், ஆனால் அது இலக்குத் தவறி வெடித்ததால் பொது மக்கள் கொல்லப்பட்டமைக்கு தமது ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதாக அந்த அமைப்பின் பேச்சாளர் அசாட் பலூக் தெரிவித்தார்.

இரண்டு சைக்கிள்களை இணைத்து இந்தக் குண்டு பொருத்தப்பட்டிருந்ததாகவும், இது 20 கிலோ நிறையுடையதெனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமாதானத்திற்கும், அமைதிக்கும் எதிரானவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக ஜனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலையிட்டு மக்கள் அடிபணிந்து செல்லக்கூடாதென பாகிஸ்தான் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ஷேக் ரசீத் அகமட் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையாதலால் சந்தைகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் முடப்பட்டிருந்ததெனவும், இதனால் இழப்புக்கள் குறைவடைந்ததெனவும் அந்த மாகாண மேயர் மொகமட் ரகீம்காகர் தெரிவித்தார்.



கிளர்ச்சிவாதிகள் வெளியிடங்களிலிருந்து தம்மால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள்மீது றொக்கட் தாக்குதல்களை மேற்கொள்ளமுடியாத நிலையில், தற்போது தமது தாக்குதல் உத்திகளை மாற்றியமைத்துள்ளதாக பொலிஸ் அதிகாரியான பர்வேஷ் ரபீமாற்றி தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் நான்கு வாகனங்கள் சேதமடைந்ததுடன், அருகிலிருந்த கட்டடங்களின் யன்னல் கண்ணாடிகளும் உடைந்து, கட்டடங்களுக்கும் சிறுசேதம் ஏற்பட்டுள்ளது.

# இஸ்லாமிய இராணுவத் தலைவர் பாகிஸ்தான் படையினரால் கைது



ஆப்கானில் மூன்று ஐ.நா.பணியாளர்கள் கடத்தப்பட்டதற்கு காரணமாக இருந்த இஸ்லாமிய கிளர்ச்சிவாத அமைப்பின் தலைவரை பாகிஸ்தான் படையினர் கைதுசெய்துள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர் இஸ்லாமிய இராணுவ அமைப்பின் தலைவரான சையீட் அக்பர் அக்கா எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானின் எல்லைப் புறத்திலிருந்து பாகிஸ்தானின் தென்மேற்கு பகுதிக்குள் செல்ல முற்படுகையிலேயே இவர் கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர் கைது செய்யப்பட்டவேளை இவருடைய குடும்ப உறுப்பினர்களும் இருந்ததாகவும், ஆனால் அவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் பாகிஸ்தானின் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ரசீத் அகமட் தெரிவித்தார்.

தற்போது இவர் பாகிஸ்தான் படையினரின் பாதுகாப்பிலேயே உள்ளதாகவும், இவரை ஆப்கானிடம் கையளிப்பதற்கு தாம் விரும்பவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

# அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புச் செயலர் பேனாட் ஹெரிக் பதவியிலிருந்து விலகல்!

புதிதாக நியமிக்கப்பட்ட அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புச் செயலர் பேனாட் கெரிக் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

கடந்த 2001 செப்ரம்பர் தாக்குதலின் பின்னர் உருவாக்கப்பட்ட உள்நாட்டுப் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலராக பேனாட் கெரிக் கடந்த வாரம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷால் நியமிக்கப்பட்டிருந்தார்.

தனது வீட்டுப்பணியாளர் மற்றும் வளர்ப்புத் தாய் என இருவரை நியமித்தது தொடர்பாக தற்போது தோன்றியுள்ள குடியுரிமை மற்றும் சட்டச்சிக்கல்கள் தொடர்பாகவே கெரிக் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள கெரி -

இந்த நியமனங்கள் தொடர்பாக எழுந்துள்ள பலரது கேள்விகளுக்கு தான் பதிலளிக்கவேண்டிய சூழ்நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேசமயம் வருமான வரி தொடர்பான விபரங்களை உரிய முறையில் சமர்பிக்க கெரி தவறியமையாலும் சட்டச் சிக்கல்கள் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரங்-கன் நிறுவனத்தில் இருந்து பங்கு இலாபமாக 6.2 மில்லியன் அமெரிக்க



டொலர்களைப் பெற்றுள்ளபோதும் இது தொடர்பான வருமானவரிக் கோப்புக்களை கெரி சமர்ப்பிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செப்ரம்பர் தாக்குதலின் பின்னர் உருவாக்கப்பட்ட உள்நாட்டு பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலராக கெரி நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து பலரது கவனத்தினையும் அவர் ஈர்த்திருந்தார்.

ஈராக் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் ஈராக் நாட்டு பொலிஸ் படையை கட்டியெழுப்புவதில் கெரி பெரும் பங்காற்றியுள்ளார். முன்னாள் நியூயோர்க் நகர பொலிஸ் அதிகாரியான இவர், ஈராக்கில் உள்ள அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார்.

# அரசியல் கட்சிகளின் ஊழல் இந்தியாவுக்கு 5 ஆவது இடம்!

பெர்லினை தலைமையகமாக்கொண்ட 'டிரான்ஸ் பரன்ஸி இண்டர் நஷினல்' (டி.ஐ) நிறுவனம் 64 நாடுகளில் ஊழல் பற்றி கணக்கெடுப்பு நடத்தியது. நேற்றுமுன்தினம்



கென்யாவில் பல கோடி மரங்கள் நட்டு, பசுமைப் புரட்சி செய்த வங்காரி மாத்தாய்க்கு ஒஸ்லோ நகரில் நேற்றுமுன்தினம் நோபல் பரிசு வழங்கப்பட்டது. நோபல் பரிசுடன் வங்காரி மாத்தாய் புன்முறுவலுடன் காணப்படுகிறார்.

கடைப்பிடிக்கப்பட்ட சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு அந்த நிறுவனம் நடத்திய கணக்கெடுப்பு விபரங்கள் வெளியிடப்பட்டன. அதன்படி உலக நாடுகளில் அரசியல் கட்சிகளின் ஊழல் பட்டியலில் இந்தியா 5 ஆவது இடத்தில் உள்ளது. ஈக்வேடார், ஆர்ஜன்டீனா, பிரேசில், பெரு ஆகியவை முறையே முதல் 4 இடத்தைப் பிடித்துள்ளன. 'டி.ஐ' நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதுபற்றி மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

அரசியல் வாழ்வில் ஊழல் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டமும் பாதுகாப்பின்மையும் முக்கிய பிரச்சினையாக இருந்து வருகின்றன. வறுமை, விலைவாசி உயர்வை அடுத்து 'ஊழல்' முக்கிய பிரச்சினையாக உள்ளது.

கணக்கெடுப்பில் பங்குபெற்றவர்களில் ஏறத்தாழ 10 சதவீதமானோர் - தாங்களோ அல்லது தங்கள் குடும்பத்தினரோ கடந்த சில ஆண்டுகளில் லஞ்சம் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தனர். மொத்தத்தில் வசதி படைத்தவர்களைவிட ஏழைகள்தான் ஊழலால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறைந்த வருமானம் உள்ளவர்களில் அரைப்பங்கினர் சிறுசிறு ஊழல்கள்தான் பிரச்சினை என்று கூறுகிறார்கள். உயர் வருவாய் பிரிவில் 38 சதவீதமானோர் இதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

# வெனிசுலா விமான விபத்தில் 16 படையதிகாரிகள் பலி!

வெனிசுலா நாட்டின் இராணுவ விமானமொன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த உயர் அதிகாரிகள் 16 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விமானம் தலைநகரிலிருந்து பறப்பை மேற்கொண்டதாகவும், இதன்போது வடமேற்குப் பகுதியிலுள்ள மலைப் பகுதியில் விபத்துக்குள்ளாகி விழுந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விமான விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. விபத்தில் சிக்கிய விமானத்தில் பயணம்செய்த 16 இராணுவ அதிகாரிகளும் வெளிநாட்டுக்குச் சென்றுகொண்டிருந்தவேளையே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக வெனிசுலாவின் பொது மக்கள் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த கேணல் அன்ரோனியோ றிவோறோ தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் எவரும் உயிர் தப்பவில்லையெனவும், இந்த விபத்துத் தொடர்பாக வெனிசுலா உள்துறை அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிடுமெனவும், சம்பவ இடத்திற்குச் சென்றுள்ள வெனிசுலா நாட்டின் பொலிஸ்மா அதிபர் ரபீல் டேபன் ரோறஸ் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ராஜீவ்காந்தி படுகொலை; சந்திரசுவாமிக்கு தொடர்பு!

## நீதிமன்றில் சி.பி.ஐ. அறிக்கை



முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சந்திரசுவாமிக்குத் தொடர்பிருப்பதாக இந்தியாவின் மத்திய புலனாய்வுத்துறையான சி.பி.ஐ நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்ததை அடுத்து இந்திய அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

ராஜீவ்காந்தி 1991ஆம் ஆண்டு ஸ்ரீபெரும் புதூரில் தேர்தல் பிரசாரத்துக்குச்சென்றபோது படுகொலை செய்யப்பட்ட வழக்கை சி.பி.ஐ.யின் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரித்து நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு தீர்ப்பும் வழங்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில் பிரபல அரசியல் சாமியார் சந்திரசுவாமிக்கு ராஜீவ்காந்தி படுகொலையில் தொடர்பிருப்பதாக சி.பி.ஐ இப்போது பரபரப்பான தகவலை வெளியிட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய சாமியாரான சந்திரசுவாமிக்கு அரசியல்வாதிகள் பலருடன் நெருக்கமான நட்பு உள்ளது. இவர் மீது அன்னியச் செலாவணி ஒழுங்குமுறை சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் சி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்திவருகிறது.

புதுடெல்கி மேலதிக நீதிமன்றத்தில் இதற்கான வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நீதிமன்றில் சந்திர சுவாமியார் ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

வெளிநாட்டில் வாழும் பக்தர்களைச் சந்தித்து பக்தி சொற்பொழிவு நடத்த வெளிநாடு செல்ல அனுமதிதர வேண்டும் என்று மனுவில் அவர் கூறினார்.

நேற்று இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்திரசுவாமி வெளிநாடுசெல்ல அனுமதிக்கக் கூடாது என்று சி.பி.ஐ. தரப்பில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. சி.பி.ஐ.தரப்பில் நீதிமன்றில் ஆஜரான பொலிஸ் அத்தியட்சகர் பி.என்.மிஸ்ரா எழுத்து மூலம் ஒரு அறிக்கையைத் தாக்கல் செய்தார். ஜெயின் கமிஷன் விசாரணை அறிக்கை அடிப்படையில் 1998 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பலநோக்கு ஒழுங்குமுறை கண்காணிப்பு ஏஜென்சியின் தலைமை புலனாய்வு அதிகாரியாக மிஸ்ரா பொறுப்பு வகித்து வருகிறார். இந்த ஏஜென்சி ராஜீவ் காந்தி கொலை குறித்து மேலதிக விசாரணையை நடத்திவருகிறது.

நீதிமன்றத்தில் மிஸ்ரா தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டிருப்பதாவது -

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சந்திரசுவாமிக்கு தொடர்பிருப்பதாக எங்களுக்குக் கிடைத்த ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. ராஜீவ் கொலையில் சந்திரசுவாமிக்கு பங்கிருப்பதாக நாங்கள் தீவிரமாக சந்தேகிக்கின்றோம்.

குறிப்பாக ராஜீவ் காந்தியை படுகொலைசெய்ய சந்திரசுவாமி நிதியுதவி செய்திருப்பதாகக் கருதப்படுகிறது. இதுகுறித்து விசாரணை நடத்தி வருகிறோம். சந்திரசுவாமி உட்பட இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பல்வேறு நபர்களின் பணப்பரிமாற்றம் பற்றி தகவல் கேட்டு 23 நாடுகளுக்கு சி.பி.ஐ கடிதம் எழுதியுள்ளது. 5 நாடுகளில் இருந்து மட்டுமே பதில் வந்துள்ளது. மற்ற 18 நாடுகளில் இருந்து பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

எங்கள் தரப்பில் விசாரணை முடியவில்லை வெளிநாடுகளில் இருந்து பதில் கடிதங்கள் வந்ததும் சந்திரசுவாமியிடம் விசாரணை நடத்தப்படும் எனவே அவரை வெளிநாடு செல்ல அனுமதிக்கக்கூடாது இவ்வாறு மிஸ்ரா கூறினார்.

இதேபோல மத்திய அமுலாக்கப் பிரிவு சட்டத்தர்ணி நவீன்குமார் வாதாடும்போது சந்திரசுவாமிக்கு வெளிநாடுகளில் இருந்து கோடிக் கணக்கில் பணம் வந்துள்ளது. அதில அன்னியச் செலாவணி மோசடிநடந்துள்ளது. அவரை வெளிநாடு செல்ல அனுமதித்தால் நீதியின் பிடியில் இருந்து தப்பி ஓடிவிடுவார் என்று கூறினார்.

விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.ராஜீவ் காந்தி கொலைவழக்கில் சந்திரசுவாமிக்கு தொடர்பிருப்பதாக சி.பி.ஐ. கூறியிருப்பது புதிய திருப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

மூதறிஞர் சொக்கன்

# கலை, இலக்கியம், மொழி என்பவற்றுடன் மண்ணையும் நேசித்த நாட்டுப் பற்றாளர்!

## கலை பண்பாட்டுக்கழகம் அஞ்சலி

(கிளிநொச்சி)

தமிழ்மொழி மீது நிலைமாறாத காதலும், தமிழீழ விடுதலைமீது ஆழமான பற்றும் கொண்டிருந்த மூதறிஞர் கலாநிதி க.சொக்கலிங்கத்தின் மறைவு தேசத்திற்கும் தமிழினத்திற்கும், தமிழ் வளர்ச்சிக்கும் பேரிழப்பாகும்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் - மூதறிஞர் சொக்கலிங்கத்தின் மறைவையொட்டி வெளியிட்ட அனுதாப செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மூதறிஞர், கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களின் மறைவுச் செய்தி எம்மீது இடியாகத்தான் இறங்கியது. எம் மண்ணின் முதுபெரும் தமிழறிஞரும், தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கு அளப்பரிய தொண்டாற்றியவரும், தமிழீழ விடுதலையைத் தன் அந்திமத்துக்கிடையில் காண அவாவுற்றிருந்தவரும், எழுத்தாளரும், கவிஞரும், நாடக ஆசிரியருமான சொக்கன் ஐயா காலமானதறிந்து நாங்கள் கலங்கிப்போயுள்ளோம்.

தமிழ் மொழியின் ஆழ வேரறிந்த மூத்தோனாக எம்முடன் இவர் வாழ்ந்திருந்தார். எம் மொழியின் சீரையும், செம்மையையும், மொழியின் வழுவிலா இலக்கண வகையையும் தெரிந்தும், தெளிந்தும் இருந்த பேரறிஞராக இவர் பிரகாசித்தார்.

இளமைதொட்டு தள்ளாமை வந்துற்ற முதுமைவரை ஓயாது சிந்தித்தும், எழுதியும் செயற்பட்டு வந்தவர் நேற்றிருந்து சிந்திப்பதை நிறுத்திவிட்டார். என்பது எம் தேசத்துக்கும், தமிழினத்துக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பேரிழப்பாகும். இவர் தமிழ் மொழிமீது நிலைமாறாத காதலும், தமிழீழ விடுதலைமீது ஆழமான பற்றும் கொண்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும், எம் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் வழிகாட்டலையும் நெஞ்சார ஏற்றுத் தன் எழுத்திலும் அதனைப் பதிவு செய்தார். 'சங்கிலியன் தொடக்கம் பிரபாகரன் காலம் வரை' என்ற இவரின் பிரபலமான கட்டுரைமூலம் தன் உள்ளக்கிடக்கையை உலகுக்கு உணர்த்தியிருந்தார்.

'ஈழசேனன்' என்ற புனைபெயரில் எழுதிய சிறுகதைகளில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை உணர்த்தினார். அரங்குகளில்கூட எந்த அச்சமுமின்றி தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குத் தன் ஆதரவைத் தெளிவுபடுத்தினார். தூய தமிழ்ப் பழக்கத்தை மீண்டும் வழக்கத்துக்குக் கொண்டு வரும் எத்தனிப்புக்கும், கருத்துருவாக்கத்துக்கும் இவர் காட்டிய உற்சாகம் எமக்கு உறுதுணையாக விளங்கியது.

உடல் தளர்ந்திருந்த வேளையிற்கூட எமது அழைப்பையேற்று கலை, இலக்கிய அரங்குகளில் கலந்துகொண்டு காத்திரமான பங்களிப்பை நல்கினார். எம் மண்ணில் கலை, இலக்கியத்துறையிலும் தமிழை செம்மையாகக் கற்றறிந்து தெளியும் அறிவுக்குழத்திலும் புதிய தலைமுறை ஒன்று புலர்வதற்கு இவர் ஆற்றிய பெரும் பணி காலத்தால் அழியாதாகும். கலை, இலக்கியம், மொழி என்பவற்றுடன் எம் மண்ணையும் நேசித்த நாட்டுப்பற்றாளராகவும் சொக்கன் ஐயா எம்முடன் வாழ்ந்துபோனார்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருடனும், கலை இலக்கியப் படைபாளிகளுடனும் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகமும் இணைந்து கொள்கிறது. எம் தேசத்தின் மூதறிஞர் ஒருவரின் பிரிவால் எமது விடுதலை அமைப்பு துயருற்றிருக்கிறது. வந்தபோதும், எம்முடன் இருந்தபோதும் இவர் பதித்த தடங்கள் அவரின் மறைவுக்குப் பின்னும் எங்களுடன் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இசை நிகழ்ச்சியில் குண்டுவெடிப்பு...

தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக -

இந்திய சினிமா நட்சத்திரங்கள் கலந்துகொண்ட இசை நிகழ்ச்சி கொழும்பில் நடைபெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் 15 இற்கு மேறபட்டவர்கள் காயமடைந்தது டன், 12 பேர்வரை பொலிஸாரால் கைது செய யப்பட்டனர்.

நேற்றுமாலை சுதந்திர சதுக்க வீதி, நூதனசாலை சந்தி மற்றும் லிப்டன் சுற்றுவட்டம் ஆகிய இடங்களிலிருந்து எதிர்ப்புப் பேரணிகள் இசை நிகழ்வு நடைபெறவிருந்த மைதானத்தை நோக்கிப் புறப்பட்டன.

மூன்று முனைகளிலிருந்து புறப்பட்ட இந்தப் பேரணிகளை தடுத்து நிறுத்த பொலிஸார் பரவலாக வீதித் தடைகளை ஏற்படுத்தினர். ஆனாலும் பேரணியில் ஈடுபட்டோர் வீதித் தடைகளை அகற்றிய பின்னர் குறித்த மைதானத்தை நோக்கிச் சென்றபோது பொலிஸாருக்கும் பேரணியில் ஈடுபட்டோருக்கும் இடையில் வன்முறைகள் வெடித்தன.

பேரணியில் ஈடுபட்டோர் பொலிஸார் மீது கற்களை வீசியதுடன் பொலிஸ் வாகனங்களையும் தாக்கினர். இதற்குப் பதிலாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்புகை மற்றும் தடியடிப்பிரயோகத்தை மேற்கொணடனர். பொலிஸாருக்கு உதவியாக விசேட அதிரடிப்படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த வன்முறைகளில் அப்பகுதியிலிருந்த வர்த்தக நிலையங்கள் சிலவற்றின் காட்சியறைக் கண்ணாடிகளும் சேதமடைந்தன.

இந்தச் சம்பவத்தில் ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண.ஓமல்பே சோபிததேரர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சில பௌத்த பிக்குகள் உட்பட 12 பேர்வரை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகவேண்டிய இசைநிகழ்வு இரவு 8.10 மணிக்கு ஆரம்பமாகியது. இதற்கு பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கங்கொடவில சோமதேரரின் முதலாவது சிரார்த்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்படுவதால், இந்திய நடிகர் ஷாருகான் குழுவினரின் இசை நிகழ்ச்சியை அன்றைய தினம் நடத்தக்கூடாதென கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் உண்ணாவிரதமிருந்துவந்த பிக்குகளிடம் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் நேற்று மன்னிப்புக் கோரியதை அடுத்து தமது உண்ணாவிரதத்தை பிக்குகள் கைவிடுவதாக அறிவித்திருந்தனர்.

எனினும் இந்த இசைநிகழ்வு ஆறு மாதங்களுக்கு முன்னரேயே ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் மறைந்த தேரரின் சிரார்த்ததினம் இதேதினத்தில் இடம்பெறுவது தமக்குத் தெரியாதெனவும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் வாய்மூலமாகவும் எழுத்துமூலமாகவும் மன்னிப்புக் கோரியதை அடுத்தே பிக்குகள் தமது உண்ணாவிரதத்தை கைவிட்டிருந்தனர்.

இதேவேளை, காலஞ்சென்ற தேரருக்கு மரியாதை செலுத்தும் வகையில் இசைநிகழ்வின் ஆரம்பத்தில் இரண்டு நிமிடநேர மௌன அஞ்சலி செலுத்தவதாகவும் ஏற்பாட்டாளர்கள், பிக்குகளுக்கு உறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு....

போர்நிறுத்த ஒப்பந்தம் செயலிழந்து மீண்டும் போர் ஆரம்பமாகக் கூடிய சூழ்நிலையை தடுப்பதற்கான முயற்சியாகவே உதவிவழங்கும் சமூகங்களின் இணைத் தலைவர்கள் இந்த முயற்சியை மேற்கொள்ளவுள்ளனர். சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க மேற்கொள்ள எடுக்கும் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தால், அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதயுதவிகள் இடைநிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸெல்சில் இடம்பெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைவர்களின் இந்த விசேட கூட்டத்தில் அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் ஆர்மிரேஜ், ஜப்பானின் விசேட தூதுவர் அகாஷி, நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன், ஐரோப்பிய சமூகப் பிரதிநிதிகள் ஆகியோா கலந்துகொள்ளவுள்ளனர். (தே)

## கருணா குழு என்ற பெயரில்....

எனவே கருணா குழு என்ற ஒன்று தமிழர் தாயக மண்ணில் இல்லை. இலங்கை அரச இராணுவ புலனாய்வு இயந்திரம் காலத்திற்குக் காலம் இத்தகைய பெயர்களைக் கொண்ட குழுக்களைக் கூறி மக்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்துவது வழக்கமாகும்.

திட்டமிட்ட முறையில் மாவீரர் வார நிகழ்வுகளை குழப்ப முயன்றார்கள் முடியவில்லை.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் கூட இராணுவ வாகனங்களிலேயே எடுத்துச் சென்று விநியோகிக்கப்பட்டன. இவையெல்லாம் அரச இராணுவ புலனாய்வுப் பிரிவின் திட்டமிட்ட செயல்களேயாகும்.

இதேவேளை அரச இராணுவ புலனாய்வுத் துறையினருக்கு சில முஸ்லிம் சகோதரர்கள் துணை போவதாக மக்கள் மத்தியில் கருத்துண்டு.

அவ்வாறு இருப்பின் அவர்கள் அதனை தவிர்த்துக்கொள்வது எதிர்காலத்தில் தமிழ் - முஸ்லிம் உறவுகள் மேலும் வலுப்பெற உதவும் என்றார்.

கௌசல்யன் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

கிழக்கிலுள்ள தரவை, தொப்பிகல பிரதேசங்கள் எமது இதய பூமியாகும். ஆனால் இப் பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லையென சில ஊடகங்கள் பொறுப்பற்ற விதத்தில் பொய்யான, புரட்டான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

எமது பிரதான மாவீரர் துயிலும் இல்லம் தரவையிலேயே உள்ளது. அங்கு இம்முறை மிக உணர்வு பூர்வமாகவும் எழுச்சி பூர்வமாகவும் நாம் மாவீரர் தின நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தினோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (07)

## தமிழறிஞர் சொக்கனுக்கு...

பெற்ற பின்பும். தமிழ்ப் பணியில் ஓய்வின்றி உழைத்தவர்.

அவர் படைத்த கதை, கவிதை, நாடகம், நாவல் என்பன தமிழ் மக்களிடையே நாட்டுப் பற்றையும் இனப்பற்றையும் வளர்த்தன. அவர் படைத்த வரலாற்றுக் கட்டுரைகள், மாணவர்களுக்கான இலக்கிய, இலக்கண நூல்கள் கூட மாணவர்களை மொழி, இன, நாட்டுப் பற்றுள்ளவர்களாக்கி விடுதலைப் போரின் பால் அவர்களை ஈர்க்கும் வகையில் அமைந்தன.

தமிழ் மொழியை உயிரிலும் மேலாக எண்ணிச் செயற்பட்ட அவர், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தமிழீழக் கல்விக் கழகம், தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, கலை பண்பாட்டுக் கழகம் ஆகியவற்றோடு இணைந்து முதுமைக் காலத்திலும் தமிழ் மொழிக்கும் இனத்துக்கும் ஆற்றிய பணி அளப்பரியது.

நோய் வாய்ப்பட்டிருந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாது அரும் பணியாற்றி வந்த அன்னாரின் திடீர் மறைவு எமக்கு பேரதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. நாட்டுப் பற்றோடு அவர் ஆற்றிய அரும் பணியை நினைவில் நிறுத்தி அன்னாரை நாட்டுப் பற்றாளராக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு அறிவிக்கை செய்வதுடன் அவருக்கு இறுதி வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

அன்னாரின் பிரிவால் துடித்து நிற்கும் அவரது பிள்ளைகள், உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்



### கலாநிதி கந்தசாமிசெட்டி சொக்கலிங்கம்
[சொக்கன்]

மூத்த எழுத்தாளரும், ஓய்வுபெற்ற அதிபருமான கலாநிதி கந்தசாமிசெட்டி சொக்கலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2004) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
சொ. விமலன் (மகன்)

(சி-3458)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 12.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.